Registered as a Newspaper

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

இம்போட்டற்
நைலெக்ஸ்சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 விபவ ஆண்டு மார்கழி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 15 (25-12-1988) UTHAYAN -A LAVELY TAMIL DAILY கதிர்: 27

## நத்தார் நல்வாழ்த்துக்கள்



இறைமகன் கிறிஸ்துநாதர் உயர்குலத்தில் பிறப்பார் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அவர் ஓர் ஏழைக்குடும்பத்தில், மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அவர் அடிமட்டத்து மக்கள் மீதே அதிக அன்பு செலுத்துபவராக இருந்தார்.

தேவபாலன் இயேசுவைத் தாயும் தந்தையும் அன்புரிமையுடன் சீராட்டும்காட்சி இது.

கிறிஸ்தோதயத் திருநாளைக் கொண்டாடும் வாசக நேயர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள், அன்பர்கள் அனைவருக்கும் உதயனின் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்.

# ராணுவ நடவடிக்கையை தெற்கில் தணிக்க முடிவு

## ஆயுதம் ஏந்திய சகலரையும் வழிக்குக் கொண்டுவரும் முயற்சி

கொழும்பு, டிசம்பர் 25

தென்னிலங்கையில் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இது சம்பந்தமாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆயுதம் ஏந்திய சகலரையும், அமைதி வழிக்குக் கொண்டுவரும் முயற்சியின் முதற்கட்டமாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் நாட்டில் அமைதியைக் கொண்டுவரவேண்டும் என்பதில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு பிரேமதாச அக்கறையாக உள்ளதாக அரசாங்கத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதனாலேயே அவசரகாலச் சட்டத்தைப் புதுப்பிப்பதில்லை என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

ஜே வி பி உட்பட சகல ஆயுதம் தாங்கிய தீவிரவாதக் குழுக்களையும் ஜனநாயக வழிக்குக் கொண்டு வரும் நல்லெண்ண நடவடிக்கைகளாகவே இந்தஇரண்டு முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஜனவரி இரண்டாம் திகதி பதவி ஏற்கும்போது ஆற்றும் உரையின்போது அமைதியை உருவாக்குவதற்கான தமது யோசனைகளை திரு பிரேமதாச வெளியிடுவார் என்றும் அதே வட்டாரங்கள் தகவல் தந்தன.

குறிப்பாக ஜே.வி.பியினரின் சில முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் அவரது உரை அமையும் என அரச வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகவும் கூறப்பட்டது. (அ)



அங்கை தணிச்சால் இஞ்சை என்ன மாதிரி ஆகுமோ பின்னை.....!

ரச்சந்தி முரளி

## ஜன. 2ஆம் திகதி 10-42 க்கு பிரேமா பதவி ஏற்பார்

கொழும்பு. டிச 25

64 வயதான திரு ரணசிங்க பிரேமதாஸ எதிர்வரும் 2ஆம் திகதி காலை 10-42 மணிக்கு ஜனாதிபதியாக கண்டி தலதா மாளிகையில் உள்ள எண்கோண மண்டபத்தில் பதவி ஏற்பார்.

அதன்பின்னர் அவர் அங்கிருந்து நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார்.

பிரதம நீதியரசர் பரிந்தாரணசிங்கா முன்னிலையில் திரு. பிரேமதாஸ சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்.

அன்று மாலை திரு.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25. 12. 1988
மார்கழி 10
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.27 முதல் 10 57 வரை
ராகுகாலம்:
4 57 முதல் 6.27 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்
நத்தார் திருநாள்

## தமிழ்நாட்டில் இ. காங்கிரஸ் 209 தொகுதிகளில் போட்டி

சென்னை, டிச 25

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் 209 தொகுதிகளில் போட்டியிடும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

முதலாவது வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் பொதுச் செயலாளர் நேற்று புதுடில்லியில் வெளியிட்டார்.

குமரி அனந்தன், திண்டிவனம் ராமமூர்த்தி, டி. யசோதா அன்பரசு ஆகியோரின் பெயர்கள் முதலாவது பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

இந்திரா காங்கிரஸ் எம். பி. ரங்கராஜன் குமாரமங்கலம், அமைச்சர் எம். அருணசலம் ஆகியோரும்சட்டசபைத் தேர்தலில் போட்டியிடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிச 25

ஆயிரக்கணக்கான நத்தார் வாழ்த்து மடல்கள் இன்று விநியோகிக்கப்படவுள்ளன.

இன்று நத்தார் தினம் எனினும் யாழ். குடாநாட்டில் விசேஷ தபால் விநியோகம் நடைபெற இருப்பது தெரிந்ததே (ஓ-10)

## பாதிப்புற்ற நிதி நிறுவனங்களில் முதலீடு செய்தோருக்கு அடையாள நிவாரணம் அடுத்த மாதத்தில்

கொழும்பு டிச 25

பாதிக்கப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு அடையாள நிவாரணப் பணம் வழங்கும் வேலைகள் அடுத்த மாத நடுப் பகுதியில் இருந்து ஆரம்பமாகும்.

மத்திய வங்கியின் நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் கண்காணிப்பில் உள்ள நிதி நிறுவனங்களின் கணக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மீள குடியமர்தல் நிவாரணம் மீண்டும் ஜனவரியிலேயே

யாழ்ப்பாணம், டிச 25

மீளக்குடியமர்தல் நிவாரணம்வழங்குவதில் சிறு தாமதம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனேகமாகஎதிர்வரும் ஜனவரிமாத ஆரம்பத்திலேயே மீண்டும் இந்த நிவாரணம் வழங்கப்படும் என்று இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

வங்கிகளில் வருடாந்தக் கணக்கெடுப்புகள் நடைபெறுவதாலேயே இந்தத் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் முன்னர்அறிவிக்கப்பட்டபடி இன்று வங்கிகளில் நிவாரணம் வழங்கப்படும். (ஓ-10)

## 'கன்டீன்' உரிமையாளரும் ஊழியரும் சுட்டுக்கொலை

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி முறிப்பு வீதியில் இ. போ. ச. உணவுச்சாலை (கன்டீன்) உரிமையாளரும் அவரது ஊழியரும் ஒரே இடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது.

கொலையுண்ட கடை உரிமையாளர் சங்கானையைச் சேர்ந்த அ. துரைராசா (வயது 28) என்றும், ஊழியர் பூநகரியைச் சேர்ந்த ப. சாந்தகுமார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 80 பேர் யாழ் வந்தனர்

பயிற்சியை முடித்துக் கொண்ட மக்கள்தொண்டர் படையைச் சேர்ந்த எண்பது பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் விரைவில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என அறியவருகிறது (ஓ)

## 2.400 பேர் விடுதலையாவர்

கொழும்பு, டிச 25

அடுத்த ஜனவரி 15 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் காலாவதியாகும் போது 2,400 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர்.

இவர்கள் அனைவரும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

(அ)

## இஸ்லாமபாத்தில் நடைபெறும் சார்க் மாநாட்டுக்கு ஜே. ஆர் கடைசி வெளிநாட்டுப் பயணம் இது!

கொழும்பு. டிச 25

எதிர்வரும் 27 ஆம் திகதி பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமபாத்தில் ஆரம்பமாகும் சார்க் நாடுகள் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இலங்கையின் சார்பில் ஜனாதிபதி திரு.ஜே ஆர். ஜெயவர்த்தனவே கலந்துகொள்வார்.

ஜனாதிபதி என்ற ரீதியில வெளிநாடு ஒன்றுக்கு பயணமாவதும், வெளிநாட்டுத் தலைவர்கள் மாநாடு ஒன்றில் திரு. ஜெயவர்த்தன கலந்து கொள்வதும் இதுவே கடைசித் தடவையாக இருக்கும்.

திரு.ஆர்.பிரேமதாசா புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டாலும், சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி பதவியை எதிர்வரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் மூவரின் தலைகள் சீவப்பட்டுக் கொலை!

### அப்புத்தளையில் பதற்றம்; வேலைநிறுத்தம்

கொழும்பு, டிச 25

அப்புத்தளையில் தமிழ் இளைஞர்கள் மூவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். தலைகள் கொய்யப்பட்டு, முண்டங்கள் வேறு தலைகள் வேறாக வீசப்பட்டிருந்த இந்தச் சம்பவத்தினால் அப் பகுதியில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

இந்தக் கொடூரக் கொலைச் சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் அப்புத்தளையில் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

மூன்று தமிழ் இளைஞர்களும் தென் பகுதி தீவிரவாத இயக்கம் ஒன்றினால் கடந்த புதன்கிழமை படுகொலை செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து அப்புத்தளைப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஏழாயிரத்துக்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் வெள்ளிக்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அண்மைக் காலத்தில் தமிழ் இளைஞர்கள் தென்பகுதி தீவிரவாத இயக்கம் ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டிருப்பது இதுவே முதற் தடவை என்று கொழும்பு வட்டாரங்கள் வர்ணித்தன.

படுகொலை செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் அப்புத்தளையைச் சேர்ந்தவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச.25

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலலப்பட்டார்

கொலையுண்டவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த அகஸ்டின் ஜெயசீலன் (25 வயது) எனத் தெரிவிக்கப்பட்டது

## காரைநகரில்

காரைநகர், டிச.25

கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் களபூமியில் சிங்கராசா (வயது 43,என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(ஓ 73)

## முன்னாள் சார்ஜனட் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச 25

பருத்தித் துறையில் ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் தும்பளையைச் சேர்ந்த எஸ். சபாநாதன் (வயது 65) ஆவார்.

இவரது சடலம் நேற்றுக்காலை பருத்தித்துறை புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் கிடக்கக் காணப்பட்டது. (ஓ-10)

## யாழ். மாவட்டத் தொழிலாளர் ஊழியரின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த பத்மநாபா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச 25

தொழிலாளர்கள், ஊழியர்களின் அடிப்படை நலன்களை அங்கீகரித்து, அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா, யாழ் மாவட்டத்தில் உள்ள, தனியார் துறை முதலாளிகள், இயக்குநர்களிடம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழிலாளர்களும், தனியார் ஊழியர்களும் சுரண்டப்படுவதாகவும், அந்த நிலையை மாற்றவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளரின் தொழிற் பாதுகாப்பு, அடிப்படைச் சம்பளம், 8 மணி நேரவேலை, மேலதிக நேர வேலைக்கான விசேட ஊதியங்கள் என்பவற்றோடு வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கேற்றபடி விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டுமென சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ளன. இச்சட்டங்களை அமுல்படுத்தவென தொழில் திணைக்களம் மூலம் ஒவ்வொரு பிராந்தியங்களிலும் பல அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் இத்தகைய சட்டங்கள் ஏட்டளவில் இருந்த போதிலும் யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை வர்த்தகத்துறையைச் சார்ந்த சிப்பந்திகள் சுரண்டப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிங்கர் தையல் மெஷின்கள் மற்றும் தையல் மெஷின் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கிளாஸ் மல்ரி ஷொப்பிங் சென்ரர், குருநகர் அருகில் யாழ் வீதி மானிப்பாய் (விற்பனையாளரும், பழுது பார்த்துக் கொடுப்பவர்களும்) (8422)

விநாயகர், பாலமுருகன், நடராசர் துர்க்கை அம்மன் உற்சவ பஞ்சலோக விக்கிரகம் விற்பனைக்குண்டு. சிவ்லோகார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (8238)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு புறொயிலர் இறைச்சிக் கோழி கிலோ 35/ தொடர்பு: அ. யோகானந்தா, தபால் நிலைய அருகில் சாவகச்சேரி. (C 973)

பாவித்த மேலும் செற் கட்டில், மெத்தைகள், சண்ணடி மேசை, கிற்றுர், Play Pen, Baby Cot Pram, Show case. கதிரைகள், 10 அடி நீள மேசை (தொழிற்சாலைக்கேற்றது). மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. No 307, பலாலி ரோட், (சென்றல் நேசிங் ஹோம் எதிரில்) (8369)

### காணி விற்பனைக்கு

தென் கோப்பாய் மாதா கோவில், பாடசாலை என்பவற்றுக்கு அருகாமையில் இருபாலைச் சந்தியிலிருந்து 150 யார் தூரத்தில் அமைந்துள்ள சகல வசதிகளும் பெறக்கூடிய குடியிருக்கக்கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விரும்புவோர் பின்வரும் முகவரியில் தபால் மூலம் அல்லது நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். சட்டத்தரணி அ. நடராஜன், 7 ஆம் கட்டையடி மல்லாகம். (8121)

தென் கோப்பாய் மாதா கோவில், பாடசாலை என்பவற்றுக்கு அருகாமையிலும் இருபாலைச் சந்தியிலிருந்து 150 யார் தூரத்தில் அமைந்துள்ள சகலவசதிகளும் பெறக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்புவோர் பின்வரும் முகவரியில் தபால் மூலம் அல்லது நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் சட்டத்தரணி சு. பி. நடராஜன் 7 ஆம் கட்டையடி, மல்லாகம். (8420)

### மொத்தமாக கலண்டர் டயறிகள்

மெய்கண்டான் லீலா அஷ்ட லக்ஷ்மி இரகுநந்தயா திருக்கணித, அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர் டயறிகள். பல டிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு. மக்மிலன் புத்தகசாலை, இல 3, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (C 954)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ் (Printing Cards), திருமண வாழ்த்திதழ்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் விசேட கழிவுடன் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். [illegible] புவியகம், 146, நல்லை சந்தை யாழ்ப்பாணம். (C/867)

### கோழிக்குஞ்சு விநியோகம்

புறொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (8412)

### சேவல்

2 கிலோவிற்கு மேற்பட்ட சேவல்கள் தொகையாக விற்பனைக்குண்டு கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் (8413)

## தேவை

யாழ் நகரில் வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த இடம் பாவித்த வாங்கு, மேசைகள் தேவை 412 C/o உதயன் யாழ்ப்பாணம் (8417)

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர் வேளாள பெற்றோர்கள் பாலைக் கூடிய சாதகமுள்ள மகனுக்கு படித்த அழகும் பண்பும் உள்ள மணமகளைத் தேடுகின்றார்கள். செவ்வாய் தோஷம் இல்லை அரசநிறுவனத்தில் எலக்ரோனிக்ஸ் தொழில்நுட்ப உதவியாளர் வயது 31 இல 411 C/o உதயன் யாழ்ப்பாணம் 8411)

### மணமகன் தேவை

லண்டனில் Accountancy படித்துக் கொண்டிருக்கும் 25 வயதுள்ள இந்து வேளாள குல செல்விய சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணுக்கு 33 வயதிற்குட்பட்ட டாக்டர், பொறியியலாளர், கணக்காளர் அல்லது பகுதி சித்தியெய்திய கணக்காளர் தரத்திலுள்ள லண்டன் அல்லது கனடாவில் உள்ள மணமகன் தேவை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: 40, C/o உதயன் (8423

### மணப்பந்தல்

எஞ்ஜினியர் டொக்டர் பட்டதாரிகள் வெளிநாட்டில் உத்தியோகம் புரியும் ஆண் பெண் இருபாலாரதும் ஜாதகங்கள் உண்டு விவாகம் நிறைவாவதற்கு வேண்டிய உதவிகள் தரப்படும் S A தர்மலிங்கம் 24 புறா லேன் கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம் 8358

### திருமண சேவை

திருமணப் பொருத்தனர் சரவணை காளி கோவிலடி 8ஆம் வட்டாரம். மணமகன், மணமகள் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் செ. பூதத்தம்பி (8418

### வாடகைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி கச்சேரி ஆகியவற்றிற்கு மிக அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு அல்லது ஐந்து அல்லது ஆறு மகளிருக்கு உணவுடன் வதியிடம் உண்டு. தொடர்பு திருமதி க. இரத்தினசிங்கம், 138, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (8376

### கண்டெடுக்கப்பட்டது

குறிப்பிட்ட தொகை பணம் யாழ் வைத்தியசாலை முன்பாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளவும் தொடர்பு கொள்க: கந்தவனம், E C G. D pt போதனா வைத்தியசாலை. (8424)

### பிரெஞ்சு மொழி வகுப்புக்கள்

சகல வயதினர்களுக்கும், எல்லாத் தரத்திற்கும் பிரெஞ்சு வகுப்புகள் 04 01 89 புதன் கிழமை புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு:- யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் Alliance Francaise De Jaffna 130, 1st Cross Street, Jaffna (8419)

### தவறிவிட்டது

திரு S. இராமகிருஷ்ணன் ஆகிய எனது அடையாள அட்டை 23 12 88ல் K K S Road. மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (8425)

# பெப்ரவரி 15 பொதுத் தேர்தலில் கட்சிகளின் நிலை என்ன?

கொழும்பு, டிச 25

பெப்ரவரி 15 பொதுத் தேர்தலில் எந்த எந்தக் கட்சிகள் போட்டியிடவுள்ளன?

இது பற்றிய பூர்வாங்க கண்ணோட்டம் இங்கு தரப்படுகிறது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா:-

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதா என்பது பற்றி விரைவில் நாம் தீர்மானிப்போம். அதன் பின்னரே வேட்பாளர் தெரிவு குறித்து மத்திய கமிட்டி முடிவு செய்யும்

ஜனநாயக மக்கள் அணியில் உள்ள ஏனைய கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பற்றி பின்னர் பரிசிலனை செய்யப்படும்.

### மக்கள் கட்சி

இலங்கை மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் வை. பி. டீ. சில்வா:-

பொதுத் தேர்தலில் எமது கட்சி போட்டியிடும் தொகுதிப் பகிர்வு குறித்து லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி நவ சமசமாஜக் கட்சி ஆகியவற்றுடனும் பேசுவோம்.

தேர்தலில் போட்டியிடுவது பற்றி தீர்மானிக்க லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் செயற் கமிட்டிகள் வாரமுடிவில் கூடவுள்ளனர்.

### முஸ்லிம் காங்கிரஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம் அஷ்ரப்:-

எல்லாத் தேர்தல் வலயங்களிலும் நாம் போட்டியிடுவோம் போட்டியிட விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### முஸ்லிம் முன்னணி

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி செயலாளர் [illegible] எம் ஹுசைன்:-

எமது முன்னணி தேர்தலில் போட்டியிடும். தொகுதி உடன்பாடு குறித்து ஏனைய கட்சிகளுடன் எமது முன்னணி பேசும்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள்:-

ஈ. பி. ஆர். எல். எப். மாகாணத்தின் ஐந்து தேர்தல் வலயங்களிலும் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

நேச அமைப்பான ஈ. என் டி. எல் எப், மற்றும் டெலோ, ஈரோஸ் ஆகிய அமைப்புக்களுடன் தொகுதிப் பகிர்வு பற்றிப் பேச தீர்மானிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய சோஷலிச அணியுடனும் ஈ. பி. ஆர். எல். எப் பேசும்

ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக நடைமுறைக்குத் திரும்புமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கம் பேச்சுக்கள் நடத்தும்— (இ-எ)

### ரெலோ காரியாலயம்

சோப்பாய், டிச.25

சோப்பாய்- மானிப்பாய் வீதியில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் காரியாலயம் ஒன்று திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது. (ச 72)

## நிவாரணக் கொடுப்பனவு

முல்லைத்தீவு டிச. 25

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்த்தல் நிவாரணப்பணமாக ரூபா 2000/- 22 ஆம் திகதி முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்பட்டது

31 ஆம் திகதிக்கு முன்னர் சகல குடும்பங்களுக்கும் தொடர்ந்து நிவாரணப்பணம் வழங்கப்படுமென வங்கி முகாமையாளர் கூறினார். (ச - 92)

# வீதிப் போராட்டம் குறித்து சிறிமா

கொழும்பு டிச-25

ஜனநிபதித் தேர்தலின் பின்னர் செய்தியாளர்களுக்கு திருமதி பண்டாரநாயக்கா பேட்டி அளித்தார்.

கேள்வி- வீதி ஆர்ப்பாட்டத்தின் போது ஜ. தே. க. உங்களைச் சிறையிலிடாதா?

சிறிமா. எதுவும் சாத்தியம்.

கேள்வி:- உங்களுடைய ஆதரவாளர்கள் தங்களை பணயம் (risk) வைக்கத் தயாராக இருக்கிறார்களா?

சிறிமா:- ஆம் நானே 'ல றிஸ்க்' எடுக்கிறேன்

கேள்வி.- நேற்று ஏன் அறிக்கை விடவில்லை? இன்று ஏன் விடுகிறீர்கள்.

சிறிமா:- தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்றுத்தான் ஹொறகொல்லையில் இருந்து திரும்பினேன்.

தேர்தலில் தோற்று விட்டேன் என்பதற்காக இதை எல்லாம் சொல்வதாக நினைக்காதீர்கள் 1965 - 1977 தேர்தல்களிலும் தோற்றுள்ளேன். முறைப்பாடு செய்வது இதுவே முதல் தடவை

கேள்வி- வாக்களிப்பு நடைபெறுக 49 நிலையங்களில் தேர்தல் நடத்தப்பட்டால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நினைக்கிறீர்களா?

சிறிமா:- நான் விகிதாசாரத்தில் வெற்றி பெற்றிருப்பேன். (இரண்டாம் பட்ச வாக்குக் கணக்கெடுப்பில்)

கேள்வி:- வீதிப்போராட்டத்துக்கு நீங்கள் தலைமை வகிப்பீர்களா? எப்போது ஆர்ப்பாட்டம் நடத்துவீர்கள்?

சிறிமா.- வீதிப்போராட்டத்துக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா உதாரணமாக (1977 இல்) விளங்கினார். (இ-எ)

## நீர்வேலி தெற்கில்

# கோமாரி நோயினால் பல மாடுகள் உயிரிழப்பு

மானிப்பாய் டிச 25

கோப்பாய் பகுதி மிருக வைத்தியர் உட்பட்ட பிரிவில் நீர்வேலி தெற்கில் கோமாரி நோயினால் பல மாடுகள் இறந்துள்ளன வசவமடு முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான் கட்டைச்சிப் பன்ற கிராமங்களில் இருந்து விவசாய தேவைகளுக்காக யாழுப்பணக் குடா நாட்டிற்கு மாடுகள் கொண்டு வரப்பட்டமையே இதற்கு காரணம்

— இவ்வாறு வடபிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சிறுப்பிட்டி நீர்வேலி கோப்பாய் ஆகிய பகுதிகளில் கோமாரி நோயைத் தடுக்க தடுப்பூசிபோடும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

பண்ணையாளர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தமது பகுதிக்கு கொண்டு வரப்படும் மாடுகளுக்கு அண்மையில் உள்ள மிருக வைத்தியர் மூலம் கோமாரி தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்றும்—

இப் பிரதேசங்களில் இருந்து மாடுகள் தங்களது பகுதிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் அறிந்தால் அந்த மாடுகளுக்கு அவர்கள் வேலை தமது பண்ணையில் உள்ள மற்ற மாடுகளுக்கு பன்லேற்பாடு நடவடிக்கையாக தடுப்பூசியை போட்டுக் கொள்ளவேண்டும் என்றும்—

உதவிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்தார். (உ-90)

## மாட்டு வண்டிச் சவாரியில் முதலிடம்

மானிப்பாய் டிச 25

கருகம்பானை சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் அண்மையில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளில் சகல ஏ' பிரிவு போட்டிகளிலும் சிறந்த சாரதிக்கான பரிசினை சங்குவேலியைச் சேர்ந்த திரு பொன்னையா திருபாலசிங்கம் பெற்றுள்ளார்.

கருகம்பானை விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன

திரு பொ திருபாலசிங்கத்திற்கு வெள்ளிக் கிண்ணம் பரிசாக வழங்கப்பட்டது ஒ-90

## ஆறாம் ஆண்டு நடத்த அனுமதி

முல்லைத்தீவு டிச 25

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு இந்து வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் எடுத்த முயற்சி காரணமாக இவ் வித்தியாலயத்தில் அடுத்த ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு வகுப்பை நடத்த முல்லைத்தீவு மாவட்ட பிரதேச கல்வி [illegible] [illegible] அனுமதி வழங்கியுள்ளார். (ச-92)

# வவுனியாவிலிருந்து பஸ்சேவைகள் மீண்டும்

வவுனியா, டிச 25

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வவுனியா - அனுராதபுரம், அனுராதபுரம் - கொழும்பு அனுராதபுரம் — கண்டி ஆகிய பகுதிகளுக்கான இ. போ. ச பஸ் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கு முன்னர் இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே அனுராதபுரத்திலிருந்து, வவுனியா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களுக்கான இ. போ. ச பஸ் சேவைகள் இடம் பெற்றன

ஆனால் வியாழக்கிழமை தொடக்கம் இராணுவப் பாதுகாப்பு இன்றி பஸ் சேவைகள் இடம் பெற்றதுடன் கூடுதலான பஸ்களும் சேவையில் ஈடுபட்டிருந்தன

இதனிடையில் கடந்த சில தினங்களாக நிறுத்தப்பட்டிருந்த வவுனியா கொழும்பு தனியார் பஸ் சேவைகளும் வியாழன் தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகியிருந்தன. (ச 160)

## துணுக்காய் யோகபுரம் மக்களுக்கு

# 28 ஆம் திகதி நிவாரணம்

மாங்குளம், டிச. 25

மீளக் குடியமர்தல் நிவாரணம் பெறுவதற்குத் தகுதி பெற்றிருக்கும் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உயிலங்குளம், துணுக்காய், யோகபுரம் கிழக்கு மேற்கு ஆகிய பகுதிகளில் 450 பேருக்கு எதிர் வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாங்குளம் மக்கள் வங்கியூடாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. வி சந்தசாமி உதயனுக்குத் தெரிவித்தார். (ச-94)

## பதவி வெற்றிடம்

எமது தொண்டர் ஸ்தாபன அலுவலகத்திற்கு பாதுகாவலர், சிற்றூழியர், சமையல் வேலையும் பார்க்கக்கூடியவர் தேவை சான்றிதழ்களுடன் நேரில் 30-12-88ல் வரவும் சம்பள விபரம் நேரில்.

பணிப்பாளர்

HERDCS
பூநகரி ரோட்,
பரந்தன். (8492)

## முதலாம் வருட நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
06- 08- 1947

அழிப்பு:
25- 12- 1987

அமரர்
திரு. சின்னத்தம்பி பத்மணராசா

ஆள்பவன் நலன்கருதி – இங்கு
அலைந்திடும் காவி ஒன்று – உன்
வாழ்வினில் முடிவுகளை
வரைந்ததை நினைந்துருகி
வாய்விட்டு அழுது நாளும்
வருந்தியே வருடம் போச்சு...!
தீராத குறையைத் தீர்க்க
நிலமிசை யாரால் ஆச்சு?

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
தாய், மனைவி பிள்ளைகள்,
சகோதரர்கள்.
[illegible] வீதி,
[illegible] (8487)

## கருத்தரங்கு

கொண்டமனறு வெளிக்கள நிலையம் நடத்தும் 'தருண நதிற்கேற்ப உபகரணங்கள் அமைத்தல்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் அச்சுவேலியில் நடைபெறவுள்ளது.

யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார் (ச)

## பரி. பேதுரு சிறுவர் பாடசாலை
(St. Peter's Nursery School)

1. பேர்சிவல் மண்டபம் - யாழ்ப்பாணம்
கில்னர் மண்டபம் - K. K. S வீதி.

வகுப்புக்கள் ஆரம்பம்: 05 - 01 - 1989

2. ஆசிரிய பயிற்சி வகுப்புக்கள் - கில்னர் மண்டபத்தில் ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
05 - 01 - 89 — 18 - 01 89 வரை விண்ணப்பம் கில்னர் மண்டபத்தில் சமர்ப்பிக்கலாம்.

அடிப்படைத் தகைமை -
G. C. E (O/L) சித்தி

- முகாமைக்குரு

9, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம் (8379)

## திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆபரணங்கள்

25- 11- 88 அன்று திருநெல்வேலி முத்துமாரி அம்பாளின் பழமை பொருந்தியதும் மந்திரம் ஓதப்பட்டு அன்றுதொட்டு இன்று வரைக்கும் அம்பாளின் திருமேனியில் அலங்கரிக்கப்பட்ட நகைகள் அத்தனையும் ஒரு சில தீய சக்திகளால் களவாடப்பட்டன. இவற்றை களவாடியவர்களோ அன்றி இக் களவு சம்பந்தமாக அறிந்தவர்களோ தயவு செய்து தேவஸ்தானத்துடன் தொடர்பு கொண்டு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முத்துமாரி அம்பாளின் அடியார்கள்
(8385)

வெளிவந்துவிட்டது!
க. பொ. த. உயர்தர மாணவர்களுக்குரிய
Work out
PHYSICS
'A' Level
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
21, மணல்தரை லேன், கந்தர்மடம் (யாழ்)
& B M C முனைலேன்,
யாழ்ப்பாணம்.
(C/979)

## காணவில்லை

எனது MD 90 — 92 SRI 2646 சிவப்பு) மோட்டார் சைக்கிள் 22 12-88 அன்று தட்டாதெருச் சந்தியில் காணாமல் போய்விட்டது. இதன் இஞ்சின் நம்பர் MD 90 E 1511343 செசி நம்பர் MD 90 - 1511312

இவ் வாகனத்தினை விற்பனைக்கோ, திருத்த வேலைக்கோ வந்தால் உடனடியாக இவ் விலாசத்துக்கு அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கு. திருநாவுக்கரசு
(1) கொக்குவில் மேற்கு. கொக்குவில்.
(2) No 6, திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி.
(8490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் கிறிஸ்தோதய சிறப்பிதழ்

## இறைவன் என்பது மாயைப்பொருள் அல்ல
## எம்மைத் தேடி நிற்கும் அன்பு வடிவம்

மார்கழம், ஆதமீம் என்பவை எல்லாம் மனிதனை நிஜவாழ்விலிருந்து பிரித்து கடவுள் என்னும் பெயரைச் சொல்லி மாய வாழ்வில் சிக்கவைக்கும் ஏமாற்று வித்தை என்று எண்ணுகின்ற மக்கள் எம்மத்தியில் இல்லாமலில்லை.

மார்க்கம் பாமரமக்களது பெரும் போதைப் பொருள் என்று கூறப்படும் பழையகதையும் எமக்குத் தெரியாமலில்லை.

மார்க்கம் என்னும் பெயரில் பல குறைபாடுகள் மனித வாழ்வினுள் புகுந்து விட்டன என்பது உண்மை தான்.

ஆனால் ஒரு மெய் மார்க்கம் கடவுள் என்னும் கிட்டாத பொருளைக்காட்டி மனிதனை ஏய்க்கிறது என்று



அருள் திரு. கே.பி கோவிந்தராஜ்

சொல்வதை ஏற்கவே முடியாது.

இன்று நத்தார் தினம். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த சரித்திர நிகழ்ச்சியை நினைவு கூரும் தினம்.

மனிதனது நிஜவாழ்வில் அதாவது பசியும் பிணியும் கொடுமையும் கொலையும், அடிமைத்தனமும் ஆக்கிரமிப்பும், கவலையும் கண்ணீரும் நிறைந்த வாழ்வில் இறைவன் திட்டவட்டமாகவும் சமூகம் இரத்தமுமான பாலகனாகப் பிறந்து விட்ட தினம்.

ஆம்! நத்தார் இன்று எமக்குத் தரும் செய்தி இறைவன் என்பது மாயைப் பொருளோ, எட்டாக் கனியோ, ஏய்க்கும் பொருளோ அல்ல.

அது எமது வாழ்வில் கலந்து, எமமோடு இணைந்து விட்ட அன்புத்தந்தை எம்மை வாழவைக்க, எம்மைத்தேடி நிற்கும் அன்பின் வடிவம்.



கிழக்கிலே தோன்றிய நட்சத்திரத்தைக் கண்டு இயேசு பாலகனைத் தரிசிக்க பெத்தலகேம் நோக்கிச் செல்லும் ஞானிகள் மூவர்.

## அவர் கொணர்ந்த புதுவாழ்வு - அருள் நல்ல உள்ளங்களுக்கு சொந்தமானவை

"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உலகினில் அவர் தயவு பெற்றவருக்கு அமைதி"

இதுவே கிறிஸ்மஸ் இரவில் தூதர்களின் வாழ்த்தொலி ஆனால் அமைதி, சமாதானத்திற்காக ஏங்கும் உள்ளங்களுக்கு கேட்டுக் கேட்டு அலுத்துப் போன குரலொலியாய்த் தென்படலாம்.

அமைதியைப்பற்றிப் பேசுபவரும், அதை விரும்பித் தேடுபவரும் அமைதியின் பொருள் புரியாமலும், அதன் பாதையைத் தெரிவு செய்யாமையுமே அமைதி குலைவிற்குக் காரணங்களாகும்.

அமைதி என்றால் போரின்மை என்று நினைக்கிறார்கள் சிலர் வேறு சிலர் அது ஆன்மாவைச் சார்ந்தது என்கிறார்கள். எந்தத்



சுவாமி ஜீவாபோல்

துன்ப நிலையிலும், இடர்பாட்டிலும் யார் அநீதி இழைத்தாலும் சரி, சமாதானம் கிடைத்தால் போதும் என்று பலர் கூறும் இது பக்தர்களின் சமாதானமல்ல

படுகோலைகளின் சமாதானம் இது இறைவனிடமிருந்து வரும் சமாதானமல்ல. யாரும் தாக்காதபடி நாமே எழுப்பிக் கொண்ட தகர்ந்து விடக்கூடிய தடுப்புக் கோட்டையாகும்.

இறைவார்த்தையின் கண்ணோட்டத்தில மனிதனின் முழுநலனையும் சார்ந்தது அமைதி அது இவ்வுலக நலன்களாலும் இறைவனோடும் பிறரோடும் கொள்ளும் நல்லுறவால் பிறக்கிறது.

உறவுகள் முறிந்த நிலையில் அமைதி கானல்நீராகிறது நீதி நிலை நாட்டாமல் மேலோட்டமாக அமைதி நிலை நாட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த விமலன்
### மக்களுக்கு சமாதானம் விடுதலை அளித்தார்

அன்று மக்கள் இறைமகனை, என்று வருவார்? எங்கு பிறப்பார்? என்று காத்துக் கிடந்தார்கள் மன அமைதியற்ற மக்கள் அமைதியின் அண்ணலை அன்பின் கரை எதிர்பார்த்து ஏந்தலைக் காத்திருந்தார்கள் விடுதலை வழங்க வருவார் வருவார் என வழிமுன் வரலாறு வகுத்த தலைவர் தீர்க்க தரிசிகளால் குறிப்பிடப்பட்ட உலகை கழுந்தையைக் காண ஏங்கித் தவித்தார்கள் அவர் கொணர இருக்கும் சமாதானத்தைப் பெறுவதற்குத் துடித்தார்கள் ஏன்?

இன்று மக்கள் அதே நிலையில் தான் இருக்கிறார்கள்.

சமாதானம் வேண்டித் தவிக்கிறார்கள். அமைதி காண அலைகிறார்கள் நிம்மதி தேடி ஓடுகிறார்கள் உள்ளத்தில் உவகை இல்லை, இல்லத்தில் இனிமை இல்லை இதயத்தில் இன்பமில்லை எங்கு பார்த்தாலும் ஏக்கம், பதற்றம். பயங்கரம் அடுத்து என்ன நடக்குமோ என்ற மனக்குமுறல் இந்த நிலையிலா கிறிஸ்மஸ்?

மாமழை பிறந்தால் மனம் களிகூரும். மாபரன் பிறப்பை மாநில மீதில் மா மகிழ்வோடு மக்கள் எல்லாம் மகிழ்ந்திட என்றே ஆன்று கூவி விடுகின்றதே நாம் விடியலைத் தேடும் மக்களைப் போன்று நாடுகள் எல்லாம் நானிலம் மீதில் நாதனின் வரவை நாடியே நிற்பர்

முகத்தினில் மகிழ்ச்சி அகத்தினில் களிப்பு. அனைவரும் ஒன்றாய் அமலனின் வரவை நாடியே நிற்பர்.

ஆனால் இன்றோ மார்கழியும் வந்தது மகிழ்வு வந்ததா? மாருகக் கவலையும், கண்ணீரும் அவலமும் தான் எமக்கு இன்று வந்தது. "அற்றைத் திங்கள், அவ் வெண்ணிலவில் நீயும் இருந்தாய், நாங்களும் மகிழ்ந்தோம் இற்றைத் திங்கள் வெண்ணிலவில் உனையும் இழந்தோம், நிம்மதியையும் இழந்தோம்" என்ற பாடல் தான் இன்று எத்தனையோ குடும்பங்களில் ரீங்காரமிடுகிறது

விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த விமலன் தம் மக்களுக்கு சமாதானத்தைக் கொடுத்தார். விடுதலை அளித்தார். அன்பைச் சொரிந்தார். அற்புதங்கள் செய்தார். அரவணைத்தார் இதனால் மக்கள் விடுதலை அடைந்தனர். விடிவு பெற்றனர் வாழ்வு பெற்றனர். வளங் கண்டனர். அன்பைத் தேடி வந்த அமலனும் அன்பைப் பெற்றார். ஆசி அளித்தார். பனிதனைப் புனிதனாக்க வந்தவரின்

தோன்றும் எம் மக்களிடையே அமைதி இல்லை சமாதானம் இல்லை. விடுதலை இல்லை நல்வாழ்வு இல்லை, எங்கும், எதிலும் ஏக்கத்தின் சாயல்தான் தாகத்தின் சின்னங்கள். அவர் அன்பைத் தேடி அலைந்தார் அவர் இறை மக்கள் அமைதியைத் தேடி அலைகிறார்கள்.

இறைவன் எம்மை நாடி வந்தார். மக்களே இன்று முகாம்களைத்

**எஸ். எச். ஜெபநேசன் அடிகளார்**
(பங்குத் தந்தை மரியன்னை பேராலயம்)

வருகை வீண் போகவில்லை.

இன்று எம் மக்கள் விமலனின் வருகையை ஆர்த்தமுடன் எதிர்பார்க்கிறார்கள். ஆவலுடன் நோக்குகிறார்கள் இன்று இறைமகனின் வருகை. இவ் வேளையில் முகிபத்துவம் வய்ந்த

தேடி ஓடுகிறார்கள். வானவர் அன்று வாழ்த்தொலி பாடினார்கள் மானிடர் இன்று தெருவெல்லாம் சோக ஒலி, ஒப்பாரி பாடுகின்றார்கள் இவை தான் இன்றைய கிறிஸ்மஸ் நிலை எனவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தம் செய்யும் நாம் எந்த நிலையிலும் நம் விசுவாசத்தை இழக்காது காப்போம். "உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும், அச்சம் இல்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்று பாடினான் புலவன்; அதுபோல நமது விசுவாசத்தை, உயிருள்ள விசுவாசமாக, உறுதியுடன் காப்போம். கடவுளே எமது ஏக நம்பிக்கை அவர்தான் எமது உன்னதர். அவர் வழியாக எமது வாழ்வு எப்படியும் மலரும். மணம் வீசும், மகிழ்வூட்டும். அவரது சமாதானத்தை நம் நாடி நிற்பேம் எமது அழுகைகளையும், கலக்கங்களையும் இழப்புக்களையும் நல் மனத்தோடு ஏற்று அவரிடம் ஒப்படைப்போம். அவரது அருள் எம்மிடையே ஒளி வீச வேண்டுவோம் எமது வீட்டிலும் நமது நாட்டிலும் ஒளிவீசி, இருள் அகன்று இன்பம் சுரக்க, அமைதி பிறக்க! விடுதலை கிடைக்க வாழ்வு மலர மனங் களிக்க வேண்டுவோம்.

"அமைதியின் அண்ணலே வருக! உமது ஆசியை எமக்குத் தருக!"

## துன்பத்தில் ஓர் இன்பம்

**ஜோசப் பாலா**

சன நெரிசல் சாதாரண நாட்களை விட அதிகமாகத்தான் இருந்தது.

முண்டியடித்துப் பொருள்களை விலை கேட்க நேரம் இல்லை. இந்த உணர்வுடன் எல்லோரும் இறுதி நேர செலவுகள் செய்கிறார்கள்

பண்டிகை என்றால் எப்போதும் இப்படித்தான் போலும், என்ற மன உளைச்சலுடன் உள்ளதைக் கொண்டு யாவற்றையும் வாங்கி விட வேண்டும். என்ற நப்பாசையுடன் பல கடைகள் படியேறி விலை கேட்டு இறங்குவது அவனுக்கு ஏதோ போல் இருந்தது.

பையில் உள்ள பணத்தை அடிக்கடி எண்ணிப் பார்க்கிறான். அந்த நூறு ரூபாவுக்கு எத்தனை பொருள்களைத்தான் வாங்குவது?

ஏக்கப் பெருமூச்சோடு, கூட்டுறவுக் கடையில் ஏதாவது மலிவாகப் பெறலாம் என்றால் அங்கும் கியூதான்.

விடிந்தால் கிறிஸ்மஸ். அந்த ஒரு இரவுக்குள் எத்தனை ஆயத்தம். உணவை, உடையை. அலங்காரப் பொருள்களை சேர்ப்பதில் ஏற்படும் சிரமம் தான் கிறிஸ்மஸ்?

இவை வந்தாலே தொல்லைதான் அவனுக்கு? ஆனால் குடும்பத்தில் இதனை உணர வைக்க முடியுமா? தொடர்ந்தும் இதே நிலைதானே ஒவ்வொரு வருடமும்?

மனத்துள் எண்ணியவனாய் கியூ வரிசையில் ஆமை வேகத்தில் நகர்வதோடு. அவன் தனது பார்வையை மேயவிட்டவனாய் சுற்று முற்றும் பார்த்தான்.

எல்லோரும் இருநாள் இத்தனை சிரமத்திலும் ஓர் மகிழ்வுக்காகத் தான் கொண்டாட முயல்கிறார்களா?......... அல்லது கடமைக்கு அலைகிறார்களா? இல்லை. இல்லை வசதி படைத்தவனுக்கு தினமும் கிறிஸ்மஸ் [illegible] சில ருக்கு மட்டுந்தான் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குறள் கண்ட இறை இயேசு:
## இன்று அவனியில் அவதரிப்பு

**க. கயிலாயநாதன்**
(வட்டுக் கோட்டை கலாநிலைய முதல்வர் முன்னாள் அதிபர் - ஆங்கில விரிவுரையாளர்)

உலகிலுள்ள ஆக்கப் பொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கும் அருள் நூல் விவிலியம் (Bible) அதற்கு அடுத்து இடம் பெறுவது திருக்குறள். இவ்விரு அரிய நூல்களுக்கிடையில் நெருங்கிய தொடர்புண்டு திருக்குறளில் இயேசு பெருமானின் உருவும் திருவும் மருவுகின்றன

பண்டைதயில் இறை வாழ்வை நிறைவிக்கத் தன இன்னுயிரையே ஈந்த அருளாளர் இயேசு நாதர்.

இவர் அவதாரம் செய்யு முன் சமயநிலை வேறு மதச்சார்பான விதிகளும் கோட்பாடுகளும், சமயம் எனக் கருதப்பட்டு உலகியல் நிலையிலேயே நின்றது

ஆனால் மனிதன் இயல்பாகவே ஆன்மீகப் பசி உள்ளவன், இப்பசிக்கு விதிகளும் கோட்பாடுகளும் சற்றேனும் போன்றவை என்று புதிய ஏற்பாடு (New testament) எடுத்துரைக்கும்.

இயேசு பெருமான் தோன்றுமுன் மனிதனைக் கடவுளுடன் தொடர்புபடுத்தியது அச்சமே

இதை அகற்றி, இறைவனையும் மனிதனையும் தொடர்புபடுத்துவது "அன்பே". இந்தத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்த உதித்தவர் இயேசுபிரான் இக்கருத்தை "அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்துஞ் சிறப்பு" என்று குறள் கூறும். இங்கே "சிறப்பு" என்பது "மோட்ச வாழ்வு" அன்பினால் வையக வாழ்வை மெய்யுறச் செய்து, இறைவாழ்வை குறைவிலாது பெறலாம் என்பதே. இதன் பொருள்.

அச்சத்திற்குப் பதில் அன்பை இதயத்தில் இருத்தினால் மனிதன் தனது அயலவனை நேசிப்பான். இது கொண்டாய் மலர்ந்து இறைவனை மனிதனுள் காணலாம் இதுவே. ஆன்மீகப் பணியைத் தணிக்கும் இறைவன் மனித உள்ளங்களுள் உள்ளான் என்பதே இயேசு பெருமானின் சமய அணுகுமுறை இவ்வுயரிய கருத்தை "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்று திருக்குறள் கருகின்றது. "மலர்மிசை." என்பது மலர்போன்ற மென்மையான உள்ளத்தை உணர்த்திற்று. இங்கே இறைவன் உளன். இயேசுநாதர் முதலில் மேற்கொண்ட திருச்செயல தமக்குச் சீடரைத் தெரிவு செய்தமையே.

கடலில் வலை வீசிய இரு மீனவர்களை இயேசுபிரான் நோக்கி என்னைப் பின்தொடருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் (Follow me and I will make you fishers of men என்றார்.

இச்செயலில் இரண்டு தத்துவங்கள் உண்டு. முதலாவது இறைவனை அடைய சீடர்கள் அல்லது அடியார்கள் இன்றியமையாதவர்கள்.

இதனையே, "அடியேன் அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்" என்று இறைவனை வேண்டியவர். போப் பாதிரியார் (Dr G. U Pope) ஆங்கிலத்தில மொழியாக்கம் செய்த திருவாசகம் அருளிய மணிவாசகர் இக்கருத்தை, "அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்" என்று திருக்குறள் தருகின்றது

உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, தூய்மையாக்க வேண்டும் என்பதை



இயேசு பெருமான் மலைப் பிரசங்கத்தில், "உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பார்கள்!! (Blessed are the pure in heart for they will see God)" என்று போதித்தார் இக்கருத்தை "தூய்மை என்பது அவாவின்மை" என்று வள்ளுவர் எடுத்துக் காட்டினார்.

அவாவின்மையை இயேசுபிரான் வலியுறுத்தியுள்ளார். செல்வந்தன் ஒருவன். தான் பரமண்டலம் செல்ல வழி என்ன? என்று இயேசு நாதரைக் கேட்டான். அதற்குப் பெருமான், பத்து கட்டளைகளையும் (Ten Commandments பின்பற்றும்படி கூறினார்.

தான் அவ்வாறே செய்வதாக அவன் பதிலளித்தான் இதற்கு இயேசுபிரான், "நீ வைத்திருப்பன எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடு உனக்குப் பரமண்டலத்தில் செல்வம் கிடைக்கும் பின்னர் சிலுவையைத் தாங்கி என்னைப் பின்தொடர்" என்று ஏவினார்.

இதை விரும்பாத அந்தச் செல்வந்தன் கவலையுடன் திரும்பினான். இதனைக் கண்ணுற்ற பெருமான் "ஒத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அவனியில் தோன்றினரே!

தாவியே மோட்சஞ் சேரத்
தகையுப தேசஞ் செய்து,
சாவிய சிலுவை தன்னிற்
சடைசியில் அறைபப் பட்டு,
பாவிகட் கன்று பாடு
பட்டதோர் தேவன் யேசு
ஆயியாற் பால ஞயிங்
கவனியிற் றோன்றி னரே!

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

### ஒளி பிறந்த காலை!

பாருலகோர் துயர் போக்கப் பரமனவன்
பாலனாய் வந்துதித்தார் பூமியதில
காரிருளில் கன்னிமரி வேதனையில்
கடவுளவர் மனிதராக உருவெடுத்தார்!

இடம்கேடிக் தொவெல்லாம் தானலைந்து
இடமின்றி மாடுறையும் தொழுவமதில
கடவுளவர் வருகையது தெரிந்திடவே
கவனமதாய் குசையப்பர் பெறுவித்தார்!

தளிர்மேனி மடிமீதில் தவழ்ந்திருக்க
தாயவளும் மார்பேந்தி அணைத்தனளே
விழிபசைத்து மொழிபேசும் எழிலவனை
வந்திடத்து வாழ்த்தினராம் விண்ணவரும்!

செய்தியறிந்து சினந்தெழுந்த ஏரோதவன்
செய்வித்தான்; குழந்தைகளைக்
கொல்வித்தான்.
மெய்நடுங்க கண்ணீர் மல்கி தாயவளும்
மேய்ப்பருடன் எகிப்த்ததைச்
சென்றடைந்தார்!

[illegible]ந்துறை - ம. சிந்தாத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் வீடு தேவை.

தொடர்பு கொள்க :-

Branch Manager,
Office Equipment Ltd,
45, Pirappankulam Road
Jaffna.

[C/966]

## 31ஆம் நாள் நினைவு தினம்



### வேலுப்பிள்ளை தேவசகாயம்

தோற்றம் :- 03.05.1911

மறைவு - 25.11.1988

சரசாலை சாவகச்சேரியைச் சேர்ந்த வே தேவசகாயம் அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட யாபேருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் 25 12 88 (ஞாயிறு) இன்று நடைபெற உள்ள சடங்கில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.


சரசாலை
சாவகச்சேரி.

(8484)

## 47-ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 28 | 12 | 1960

உதிர்வு 09 | 11 | 1988



### செல்வன் பாலசுந்தரம் லோகானந்தா

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து

— குறள்

(நெஞ்சமே! இந்தத் துன்பம் தரும் நோயினைத் தீர்க்கும் மருந்து ஏதாயினும் ஒன்றை நினைத்துப் பார்த்து எனக்கு நீயாயினும் சொல்ல மாட்டாயோ?

தாயின் கருவறையில்
வந்துதித்த தலைமகனே!
பாசச் சிறகொடித்து
பறந்து விட்ட இளம் குயிலே!
நீ கூவாது வானம் இங்கு,
விடியவில்லை மகனே!

'நேற்று வரை எம் அருகில் இருந்தாய் என்றும் நீ எம் நெஞ்சில் இருப்பாய்!'' சச்சேரியடி குண்டு வெடிப்பில் எம் கண்களைத் தொலைத்து விட்டு கண்ணீரைச் சொரிந்து கொண்டிருக்கும் எம் ஆருத்துயரில் பங்கெடுத்துக்கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவால் துயருறும்,
தகப்பன், தாய் சகோதர சகோதரிகள்,
மாமன்மார், மாமிமார், குஞ்சா, குஞ்சம்மா,
பெரியம்மாமார், அன்ரி, சித்தப்பா,
மச்சான்மார், மச்சாள்மார், அத்தான்மார்
மருமக்கள்

7, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

(8483)

## வலி. கிழக்குப் பிரதேச சபை - நீர்வேலி

# கேள்வி அறிவித்தல் 1989.

வலி. கிழக்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் சாலைகள் ஆகியவற்றை 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு/ விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 05. 01. 1989 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை வலி கிழக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அப்பகுதி பிரதேச சபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரியால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் செலுத்தியதன் பேரில் 02. 01. 1989 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதியை ''விசேட ஆணையாளர் வலி கிழக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகம் நீர்வேலி'' எனவும், இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்'' எனவும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இன்ன குத்தகைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை ரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. வேறு விபரங்கள் அறிய விரும்பின் அந்தப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி. 25- 12- 88.

க. குலேந்திரா,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம் நீர்வேலி.

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| **உரும்பராய் ஊரெழு** | | | |
| 1. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை - | 25. 00 | 100. 00 | 6000. 00 |
| 2. ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை - | 25. 00 | 100 00 | 10000. 00 |
| 3. உரும்பராய் மத்திய சந்தை - | 25. 00 | 100. 00 | 27600. 00 |
| 4. ஊரெழு சந்தை - | 10 00 | 50 00 | 600. 00 |
| **நீர்வேலி** | | | |
| 1. நீர்வேலி மத்திய சந்தை | 10. 00 | 50 00 | 180. 00 |
| 2. நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை - | 20 00 | 100. 00 | 1200. 00 |
| 3. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை - | 20. 00 | 100. 00 | 2400. 00 |
| **புத்தூர்** | | | |
| 1 ஆவரங்கால் மரக்கறிச் சந்தை - | 25 00 | 100. 00 | 1200. 00 |
| 2. புத்தூர் உப அலுவலகச் சிற்றுண்டிச் சாலை - | 25 00 | 100. 00 | 2500. 00 |
| **கோப்பாய்** | | | |
| 1. கோப்பாய் மீன் சந்தை - | 25. 00 | 100. 00 | 3600. 00 |
| 2. இருபாலை மீன் சந்தை - | 25 00 | 100. 00 | 1400. 00 |
| 3 இருபாலை ஆட்டிறைச்சிக் கடை - | 50. 00 | 100. 00 | 5000. 00 |

(C/535)




★ அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
★ வாடிக்கையாளர்களுக்கு
எமது உளம் கனிந்த



★ நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் ★

புதுவருடத்தை முன்னிட்டு:

கேக் தயாரிப்புக்குத் தேவையான இறக்குமதி செய்யப்பட்ட

★ சுல்தானஸ் (Four Crown Australian)
★ கரண்ஸ் (Australian)
★ வைற் றேசன்ஸ் (with Seed & Seedless)
★ ஈச்சம் பழம் Dates (white)

இலங்கையில் மிகவும் முன்னோடிகளால் தயாரிக்கப்பட்ட சாள்ஸ் தயாரிப்புக்கள் (Charles Products)

★ செரிஸ், கண்டிபீல் ஜிஞ்சர், சவ்சவ்
★ புள்தோசி, ஜாம் வகைகள்
★ ரவ்வை, பேக்கிங் பவுடர்
★ ஐசிங் சுகர், சொ(F)ற் சுகர்
கஜு, கொக்கோ பவுடர்
★ ஒஸ்ரேலியா மாஜரின்
★ அஸ்ரா மாஜரின்
★ சனி சவுத் பட்டர்

இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர்த் தயாரிப்பும்

★ கேக் எசன்ஸ்
★ கலரிங் வகைகள்

குளிர்பானத்திற்கேற்ற இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர்த் தயாரிப்பும்

★ கோடியல் ★ லெமன்சன் வகைகள்
★ கேக் அலங்காரப் பொருட்கள் (Cake Decoration)
★ நத்தார் கேக் அலங்காரப் பொருட்கள்,
★ நத்தார் புதுவருட அன்பளிப்புப் பொருட்கள்
★ நத்தார் பொதிப் பேப்பர்

ஆகிய பொருட்களை ஒரே இடத்தில்
மிக மலிவாகவும் தரத்தில் சிறந்ததுமாகப் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்: பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24823

தலைமை அலுவலகம்:
18/1, டாம் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 26235 & 549269

(C-971)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G. C. E. (O/L) - 1989

கணிதமும் ஆங்கிலமும் சனி, ஞாயிறு வகுப்புக்கள். தனியான கவனிப்பு மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்படுவர் ஆர்வம் உள்ளோர் மட்டும்

5. 1. 89 க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

43, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

கட்டணம (for 10 hrs):-

40/- மட்டும்.

(8477)



## LML VESPA T5

### V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

இலங்கையில் L M L வெஸ்பா ஸ்கூட்டர்களுக்கு பிரதான முகவர்களான சுவிவ்ட்வீல் பிறைவேட் லிமிட்டட் ஸ்தாபனத்தாராகிய நாம் யாழ்ப்பாணப் பகுதி விற்பனையாளராக மேற்காண்போரை நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம்.

### சுவிவ்ட்வீல் பிறைவேற் லிமிட்டட்

331 யூனியன் பிளேஸ், கொழும்பு-2

தொலைபேசி 540888, 540889

(C/969)


# விதவைகளுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டம்

விதவைகளுக்கு சுயவேலை வாய்பபு ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்தி சபையும் யாழ் செஞ்சிலுவைச் சங்கமும் கூட்டாக இணைந்து செயல்படுத்த உள்ளன.

யாழ் குடாநாட்டைச் சேர்ந்த 90 விதவைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் சுய வேலை வாய்ப்புத் துறையில் பயிற்சி அளிக்கப்படும்

வேலணை, பளை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 விதவைகள் இந்தத் திட்டத்தில் பயிற்சி பெற முதலில் தெரிவு செய்யப்படுவார்கள்

சம்பந்தப்பட்டவர்களுக்கு மூன்று மாத காலம் பனம் பொருள் உற்பத்தி சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்கு மாதம் 500 ரூபா அலவன்ஸ் வழங்கபபடும்.

பயிற்சி முடிந்து அவர்கள் உற்பத்தியை ஆரம்பித்ததும் அந்த உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு பனை அபிவிருத்திச் சபை உதவும் (ஒ ஐ)

# அனுரா எந்தப் பக்கம்?

கொழும்பு, டிச. 25

திரு. அனுரா பண்டாரநாயக்கா ராய்ட்டருக்கு அளித்த பேட்டி குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரஞ்சன் விஜரத்ன கருத்து வெளியிட்டார்.

"அனுரா எந்தப்பக்கத்தில் இருக்கிறார்? சர்வாதிகாரத்தின் பக்கத்திலா?, தீவிரவாதிகளுடனா? அல்லது ஜனநாயகத்தின் பக்கமா?" —இப்படி அவர் கேட்டார். (ஒ—எ)

முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:

10- 11- 1953

● ●

ஆண்டவன் அடியில்:

25 11-1988

## முத்தையா யோகநாதன் (தம்பி)


(உரும்பராய் கிழக்கு)

எங்களையெல்லாம் மீளாத்துயரில்
விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வமே!
நோயுற்று நலியாமல் நொந்து வருந்தாமல்
பாயில் கிடவாமல் சுங்காதேவியின்
பாதங்களில் சென்றாயே தம்பி!
எம் கண்ணின் முன்
இங்கு கள்ளமில்லா உன்சிரிப்பு
தாங்குமோ உம் பிரிவு இல்லை தம்பி.
உந்தன் ஆன்மா சாந்தி பெற வேண்டுகிறோம்
நெஞ்சுருக

உங்கள் நினைவால் வருந்தும்.
ஐயா, அம்மா, மனைவி, பிள்ளைகள்,
அத்தான்மார், சகோதரியார்,
தம்பிமார், மருமக்கள், உற்றார், உறவினர்.

(8486)


## 10% லாபம்




## Simple Plane and Design

நீங்கள் மதிப்பீடு செய்து உங்கள் மனையை அமைப்பதற்கான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் தர உள்ளார்கள்

THE DESIGN DEVELOPMENTS LTD.,
K K S Road,
WEST KONDAVIL.

(8478)


# உணவுப் பொட்டலங்களை விநியோகிக்க ஏற்பாடு

வருமானம் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் 19 ஆயிரம் குடும்பங்களுக்கு ஜனவரிமாதம்முதல் உணவுப் பொட்டலங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டிருக்கிறது.

அரிசி; உள்ளூர்தானிய வகை சீனி, தேயிலை மற்றும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஜீவாகாரப் பக்கெட் ஒன்று ஆகியவை இந்த உணவுப்பொட்டலத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

பங்கீட்டு அடிப்படையின் கீழ் இந்த உணவு வகைகள் ஒன்று முதல் நான்குபேரைக்கொண்ட குடும்பம் ஒன்றுக்குத் தேவையான பொட்டலமாகவும் ஐந்துக்கும்மேற்பட்ட அங்கத்தவரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்குத்தேவையான மற்றொரு பொட்டலமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்


## FRENCH LANGUAGE

Learn French through French, fast and Efficient Audio- Visual method classes For beginners and other Levels. Commence on 4th January 1989.

**Contact:-**

**Alliance Francaise De Jaffna.**
130, 1st Cross Street,
Jaffna.

(8485)



JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

## Technician Certificate

in

Airconditioning & Refrigeration

We offer you the opportunity to qualify in the field of AIRCONDITIONING & REFRIGERATION. 3 - Semester programme (18 months) and obtain work opportunities around the Globe.

Those having Credits in Mathematics & Science and a Pass in English Language in the G. C. E. (O/L) Examination can apply.

Limited Number of Hostel Accomodations will be provided

Application forms are available at our Office

Apply before 04-01-1989

Interview will be on 06-01-1989 at 9-30 a. m

DIRECTOR:
JAFFNA COLLEGE
**Institute of Technology**
VADDUKODDAI.

(C-514)



J. M. J.

★ உங்கள் பயண அமைப்பாளர் வழங்கும் ★

அன்பும் பண்பும் நிறைந்த எம் வாடிக்கையாளர்களுக்கு
இந்த நன்னாளான கிறிஸ்மஸ் நாளில்
நாமும் இணைந்து கொண்டாடுகின்றோம்.



## ★ எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள் ★

எம்மால் அனுப்பப்பட்ட, அனுப்பப் போகின்ற
எம் அன்பான பயணிகளுக்கும் ஏனையோர்களுக்கும்

★ நத்தார் பண்டிகை நல்வாழ்த்துக்கள் ★

உங்கள் பயண அன்பர்:

# S. P. அன்ரன்

கொழும்பு கிளை: யாழ்ப்பாணம்

(C/977)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்க இலக்கியங்கள் படைப்பதற்கு இலக்கணம் படிக்க வேண்டியதில்லை

## இலக்கியப் பேரவைப் பரிசளிப்பில் தமிழ்ப் பேராசிரியர் பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 25

ஆக்க இலக்கியம் படைப்பதற்கு இப்போது வழக்கில் உள்ள இலக்கணப் புத்தகங்களைப் படித்துத் தான் ஆக வேண்டும் என்பதில்லை. ஆனால் அவற்றை படிப்பதால பயன் அடையலாம்.

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் இப்போதைய இலக்கியங்களை மையமாக வைத்து அமையக் கூடிய, இலக்கணம் எழுதப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா, கடந்த வியாழக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு யாழ் இலக்கிய வட்டத் தலைவர் திரு செம்பியன் செல்வன் தலைமை வகித்தார்.

'கலைச் செல்வி' ஆசிரியராக இருந்தவரும், யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபருமான திரு சிவசரவணபவனும் (சிற்பி) உதயன் - சஞ்சீவி ஆசிரியர் திரு ம. வ. கானமயில்நாதனும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

பேராசிரியர் திரு அ. வேலுப்பிள்ளை பரிசளிப்புரை நிகழ்த்தினார். "இலக்கியமா இலக்கணமா முந்தியது" என்ற பொருளில் அவர் பேசுகையில் கூறியதாவது:-

இலக்கியத்துக்குப் பிறகு தான் இலக்கணம் பிறந்தது இதனை தமிழ் உட்பட பல பண்டைய மொழிகளின் வரலாற்றில் இருந்து காண முடிகிறது இலக்கியங்களை முதலில் ஆக்கி, பின்னர் அவற்றினை மையமாக வைத்து இலக்கண நூல்கள் எழுந்தவையாக தமிழில் உள்ள தொல்காப்பியம், வீரசோழியம் நன்நூல் ஆகியவையும் அவ்வாறே இயற்றப்பட்டன.

தொல்காப்பியத்தை பாதுகாத்து விட்டதாக நாம் பெருமைப்படுகிறோம் ஆனால் அதற்கு முந்திய இலக்கியங்களை காப்பாற்றிப் பேண முடியவில்லை.

### இலக்கணத்தை மீறுதல்

இலக்கியங்களை அடியொற்றி வகுக்கப்படும் இலக்கணங்களை அடுத்த பரம்பரை ஆக்க இலக்கியக்காரர் மீறித் தமது படைப்புக்களை செய்வதும் உண்டு.

இப்போதைய ஆக்க இலக்கியங்களை அடியொற்றி இலக்கணம் தமிழில் இன்னும் இல்லை ஆங்கிலத்தில் அண்மையில் வெளிந்திருக்கிறது. தமிழிலும் அவ்வாறே புதிய இலக்கண நூல் எழுதப்பட வேண்டும்.

இப்போதைய ஆக்க இலக்கியங்களுக்கு வழக்கில் உள்ள ஆப்பிந்திய தமிழ் இலக்கணத்துக்கும் தொடர்புகள் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கலாம் — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### எழுத்தாளன் போடும் சிறை

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. செம்பியன் செல்வன் கூறியதாவது:-

எழுத்தாளன் தான் கொண்ட இலக்குகள் எழுத வேண்டிய நிலை உண்டு. அதனால் அவன் தனக்குத் தானே ஒரு அடையை' சிறையை உருவாக்கித் தனது ஆக்கங்களை எழுத வேண்டி உள்ளது.

மாறி வரும் விஞ்ஞான, தொழில்நுட்ப மாற்றங்களை ஒட்டி, எழுத்தாளனின் இலக்குகளும். இலட்சியங்களும் மாற வேண்டி உள்ளது. ஒரே நிலையாக எதிலும் நிற்க முடியாது. எனினும் எழுத்தாளருக்கு எழுத்தாளர் இலக்குகள், இலட்சியங்கள் மாறுபடலாம். அவர்கள் ஒரு கோணத்தின் விரி கதிர்கள் ஆவர்.

ஆகையால் எழுத்தாளர்கள் வெவ்வேறு இலட்சிய அணிகளில் நின்றாலும் சகோதரர்களே. யாழ் இலக்கிய வட்டமும் இலங்கை இலக்கியப் பேரவையும் சகல எழுத்தாளர்களையும் அரவணைத்துச் செல்ல விரும்புகிறது.

### எழுத்தாளர் சுதந்திரம்

எழுத்தாளர்கள் இப்படித் தான் எழுத வேண்டும். இதனைத் தான் எழுத வேண்டும் என்று கட்டுப்பாடு போட முடியாது. அவர்கள் சுதந்திரமாக எழுதுவதில் தலையிட எவருக்கும் உரிமை இல்லை.

அவர்கள் எழுதுவதை இதுபோன்ற பரிசளிப்புகள் ஊக்குவிக்கும்- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கலைக் காட்சி அரங்கு

உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் யாழ் மாநகர ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட் தமது ஆசியுரையில் தெரிவித்ததாவது:-

கலைஞர்கள், எழுத்தாளர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் ஆண்டவனின் கொடை பெற்றவர்கள் அதனால் தான் அவர்கள் சாதாரண மனிதர்களை விட நிகழ்வுகளையும் சமூகத்தையும் புதுமை நோக்கில் பார்க்கிறார்கள்.

அறுபதுகளின்பின்னர் எமது எழுத்தாளர்கள் சிறந்த ஆக்கங்களைப் படைத்து வருகிறார்கள்.

ஆனால் எழுத்தாளர்களோ, கலைஞர்களோ தமது படைப்புகள்மூலம் வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தை பெற முடிவதில்லை, வேறு ஒரு தொழில பார்த்துக் கொண்டு தான் கலை வளர்க்க வேண்டி உள்ளது.

ஓவியங்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் படைப்புக்களை மக்கள் பணம் கொடுத்து வாங்கி ஆதரிக்கும் பழக்கம் நமது மத்தியில் வளர வேண்டும்

கலைஞர்கள் தமது படைப்புக்களைக் காட்சிக்கு வைத்து அவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்த கலைக்காட்சிக் கூடங்கள் இப்பகுதியில் இல்லாதது பெரும் குறைபாகும் கலை அரங்கம் ஒன்றை நிறுவ மாநகராட்சி மன்றம் உதவும் – என்று அவர் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் தொடக்கவுரை நிகழ்த்தினார்

இலக்கிய ஆய்வு, நாவல், சிறுகதை, கவிதை, காவியம், நாடகம் சிறுவர் இலக்கியம் ஆகிய ஏழு துறைகளில் இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினைப் பெற்ற எழுத்தாளர்களுக்குப்பரிசுப்பணமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன

### ஆய்வரங்கு

பரிசளிப்பைத் தொடர்ந்து பரிசில் பெற்ற நூல்கள் பற்றிய ஆய்வரங்கு நடைபெற்றது.

இலக்கிய ஆய்வுக்கு பரிசு பெற்ற நூல் குறித்து ஆய்வுரை நடத்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்ததாவது:

ஆக்க இலக்கியத்துக்கும் அறிவியல் துறைக்கும் இடையேபரஸ்பரத் தொடர்பு இருக்க வேண்டும்.

இன்று கருத்துக்கள் வேகமாகப் பரவுகின்றன. இன்றைய கருத்துக்களும் விழுமியங்களும் நாளை மாற்றமடைகின்றன.

இலக்கியப் படைப்பாளன் மானிடவியல், சமூகவியல், விஞ்ஞான- தொழில் நுட்பவியல் ஆகிய துறைகள் பற்றிய அறிவும், தொடர்பும் உடையவனாக இருக்கவேண்டும்- என்றார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன் கல்விப்பேராசிரியர் பொன்னுத்துரை. மயிலங்கூடலூர் பி நடராசன் ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

திரு. செங்கை ஆழியான் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு ச. பத்மநாதன் நன்றியுரை நவின்றார். (அ-ச)



31 ஆம் நாள்
கண்ணீர் அஞ்சலியும்
நன்றி நவிலலும்
வீட்டுக்கிருத்திகை அழைப்பும்
(9-8-12 25)

திருமதி கேசவலிங்கம சத்தியபாமா
(தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1950 06 27 | 1988 11 25 |

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
வழி நடத்திய
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
மாதமொன்று சென்றாலும் அணையாத
விளக்காய்
எமதுள்ளத்தில் ஒளிவீசும் எங்கள்
அன்புத் தெய்வத்திற்கு
நிதமும் எங்கள் முத்தங்கள்.

1988-11-26 ஆம் திகதி அன்றாது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி வழங்கிய உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும். அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலாலையம், மலாமாலை வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

1988-12 25 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்

கணவர் பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

திருநெல்வேலி மேற்கு. (8467

★ முல்லைத்தீவு மாவட்டத்தில்

## இந்தியவமசாவழியினருக்கு காணிகள் பகிர்ந்தளிப்பு

ஒட்டுசுட்டான் டிச 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் காணியற்ற இந்திய வம்சாவழியினருக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களினால பாதிக்கப்பட்டு இம்மாவட்டத்தில் தஞ்சம் புகுந்த மலையக மக்களுக்கு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்கள் மணவாளன் பட்டமுறிப்பு கிராம சேவகர் அலுவலகர் பகுதியில் உள்ள முடிக்கரிய காணிகளில் குடியேற்றப்படவுள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி விசாரணைகள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நடைபெறும்.

இதன் முதல் கட்டமாக அண்மையில் ஒட்டுசுட்டான் பகுதிக்கான விசாரணை முல்லைத்தீவு கச்சேரி காணி அலுவலர் திரு த.சிதம்பரபிள்ளையினால் மேற்கொள்ளப்பட்டது. (ச-11?)

## அவர் கொணர்ந்து...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

முற்பட்டால அது அபத்தம்.

"சமாதானம் சமாதானம் என்று நம் மக்களின் காயத்தை மேலோட்டமாக நலமாக்கி விட்டனர்" என்று இறைவாக்கினர் ஏரேமியாஸ் இன்றைய நிலையை அன்றே எடுத்துரைத்தார்

கிறிஸ்மஸ் 'ஓர் அமைதியான இரவு என்பது பலருக்கு உண்மையல்ல. காரணம் ஏழ்மையில் ஒடுக்கப்பட்ட மக்களின் அழுகரல்; உயிர்களையும் உடைமைகளையும் உரிமைகளையும் பறிகொடுத்த தமிழ்த் தாயின் ஓலக் குரல; அநீதியின் கோரப் பற்களால் கிழிக்கப்பட்டு துன்புறும் அப்பாவி மக்களின் அவலக்குரல்கள், அந்த இரவின் நிசப்தத்திலும் தெளிவாகக் கேட்கிறது.

பகலில் நீதியின் குரலுக்கு தன் காதுகளை மூடிக்கொள்ளும் மரத்துப் போன மனச்சாட்சி கொண்ட அநீதர்களுக்கு அழுகைக்குரல் அமைதியைக் குலைப்பதாகவே இருக்கும். ஆம் அது தன் அருளின் தொடக்கம் கிறிஸ்து பிறந்துவிட்டார் நீதியின் ஆதவன் உதயமாகிவிட்டார் என்பதற்கு முன் அறிவிப்பு அதுவே.

எங்கெல்லாம் சுதந்திரம், நீதி. சேவை, தியாகம் நிலைபெறுகிறதோ,மனிதர் சமத்துவத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ அங்கெல்லாம் இயேசு பிறக்கிறார் அமைதியின் மகிழ்ச்சிச் செய்தி அறிவிப்பு ஆலயத்தில் அல்ல திருத்தலத்திலுமல்ல, திறந்த வெளியில், ஆட்டிடையர் சாமக்காவல் காக்கும் இடத்தில் அறிவிக்கப்பட்டது

எந்த ஒரு மனித அமைப்பும் ஆண்டவனைச் சிறைபடிக்க முடியாது அவர் கொணர்ந்த புது வாழ்வும். அருளும், உண்மையும் நல்ல உள்ளங்களுக்குச் சொந்தமானவை. அன்பு உரையாடலுக்கு உள்ளங்கள் திறக்கப்படுகின்றபோது இயேசு அங்கு கூடாரத்தை அமைக்கின்றார் அமைதியின் அண்ணலை பூண்டோடு அழிக்கத் திட்டமிட்ட 'ஏரோதுக்கள்' இன்னும் இல்லாமலுமில்லை அதிகாரத்துக்கும் அநீதிக்கும் அடிமைப்பட்டு பச்சிளம் குழந்தைகளைக் கொன்றவன் அவன்.

தடைகளையும், சூழ்ச்சிகளையும் தாண்டிச் சென்று இனம், மொழி, கலாசார வெறியிலிருந்து விடுதலையாகி இயேசுவைச் சந்தித்து ஆராதித்தார்களே அந்த மூன்று ஞானிகள் அப்படிப்பட்ட புனித மனிதர்கள் தேவை

அமைதி வரும் எனக் கைகட்டிக் காத்திராமல், துளிர்க்கும் அமைதியை தறித்து எறிந்து விடாமல், அமைதியைத் தேடி யாத்திரை செய்த மூன்று ஞானிகளைப் போல தயவு பெற்றோர் தேவை. இம் முறையில கிறிஸ்துவின் பிறப்பு கடந்தகால வரலாற்று நிகழ்ச்சியல்ல மாறாக இன்னும் நடைபெறாத நடைபெற வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்

அருளும், உண்மையும் நீதியும் யார் உள்ளங்களில் வளர்க்கப்படுகின்றதோ அவை கிறிஸ்துவின் பிறப்புக் குடிசைகளாகும். உலகில் இறைவன் தயவு பெற்று அவர் கொணர்ந்த சமாதானத்தை நீங்கள் ஒவ்வொருவரும் சுவைப்பீர்கள் என வாழ்த்துகிறோம்.

## துனபததில ஓர..

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

போலும்,

ஏனையவர்கள் கட்டிச் செல்லும் பாரசல்களை பார்க்க அவனுக்கு விசனத்தைத்தந்தது

முட்டி மோதிய சனக் கூட்டம் திடீர் என்று ஒரு திசையை நோக்கி ஓடுகிறது ஓட்டமும் நடையும் ஒருபுறம், கடைத் தெருவே வெறிச்சோடிவிட்டது.

எல்லோர் பார்வையும் எதில் ஏறித் தப்புவது, என்ற மாதிரி இருந்தது,

கையில் இருந்த பொருள்களையும் விடவும முடியாது தவிப்பதைப் பார்க்கும் போது விளக்கு மாற்றைக் காவிய மூஞ்சூறு போன்ற நிலை

ஆனால் இவனோ எதுவும் வாங்கவில்லை. முண்டி அடித்து ஏறிவிட்டான் பஸ்ஸிலை.

பழகிவிட்ட சத்தத்தால் கடைகளை பூட்டிய விட்டார்கள். அங்கே ஒலி பெருக்கியில் ஒரு குரல் கரகரப்புடன் [illegible] கரத்தைக் மட்டும் அது இன்னமையத்தந்தது. தொடர்ந்து ஊரடங்கு காலவரையறையின்றி சட்டத்தை மீறுவோர் சுடப்படுவர் என்ற அறிவித்தல்.

பணத்தைக் கொட்டி பொருள்களை வாங்கியவர்கள் ஊரடங்கால் ஒரு கொண்டாட்டமும் இல்லை என்ற ஏக்கத்துடன் கலங்குகிறார்கள்.

இவனோ நிம்மதியாக பயணம் செய்கிறான்

## வருடாந்த ஒன்றுகூடல்

குருநகர், டிச 25

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உத்தியோகத்தர்களது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி ப 2 மணிக்கு நடைபெறும்.

யாழ். மருத்துவ பீடம் ஆரம்பமாகி முதன் முதலாக நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இதுவாகும். (ஓ 5!)

## திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி டிச 25

சரசாலை வடக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பூரணை தின திருவாசக முற்றோதல் விழா பக்தி பூர்வமாக நடைபெற்றது.

முற்றோதல் நிறைவை [illegible] திருவிளக்குப் [illegible] நடைபெற்றது (ச-31)

## குறள் கண்ட...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

செலவந்தன் பரமண்டலத்தை அடைவதைக் காட்டிலும் ஓர் ஊசியின் கண்ணூடாக ஒட்டகம் புகுவது சுலபம்" என்று விளக்கினார். இக் கருத்தை உள்ளடக்கியதே, "அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருளைப் பழி" என்ற குறள்.

போட்டி பூசலால் உதைக்கப் பெற்றும், வதைக்கப் பெற்றும் சிதைக்கப் பெற்றும் சீரழியும் உலகில இயேசு பெருமான் போன்ற தீர்க்கதரிசிகளின் போதனைகளும் சாதனைகளும் இன்று இன்றியமையாதவை. (இ)


## ஆலயக் குருக்கள் தேவை

முல்லைத்தீவு, அளம்பில் முருகன் கோயிலில் தங்கியிருந்து தினமும் மூன்று காலப் பூஜை செய்வதற்குத் தகுதியான குருக்கள் தேவைப்படுகிறார். விபரங்கட்கு கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

திரு வல்லிபுரம் - இராமச்சந்திரன்,
2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(8378)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வல்லிபுரம் ராஜ்குமார்

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்; |
|---|---|
| 29-03 1982 | 08 01-1987 |

திதி: 25-12-1988

வட்டக் கருவிழியும் வான்முகில் மயிரழகும்
பட்டுக் கன்னமதில புதுவழகப் புன்னகையும்
எட்டிக் கலைபயின்ற சுட்டிச் செல்வமடா!
சிட்டுக் குருவியடா! சிந்தை குளிருதடா!
கட்டித் தங்கமடா! உன்பட்டுத் தளிர்
மேனியிலே
தொட்டனனே — அக் கூற்றுவன்

நீ மறைந்து ஈராண்டு சென்றாலும் உன்
நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
மறந்து விட்டாயா மகனே?
மறந்து விட்டாயா? உன்னைப்
பறந்து வந்து பார்க்க மனம்
கிறங்கித் தவிக்குதே — தினம்

எட்டிப் போய் விட்டாயே — மகனே
உன்னை தட்டிக் கேட்க வழியில்லாமல்
வட்டியும் முதலுமாய் அள்ளி அணைத்திட
ஆயிரம் கரங்கள ஏங்குதே!

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா,
அண்ணமார், அக்காமார்
உற்றார், உறவினர்கள்.

4 ஆம் ஒழுங்கை,
பிறவுண் ரோட்,
யாழ்ப்பாணம்.

(8382)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தம்பாப்பிள்ளை சோமசேகரம்
(Retired- Accountant Secretary Consolidated Exports Ltd. Colombo)

| தோற்றம்:- | அமரத்துவம்:- |
|---|---|
| 05-09-1919 | 05 01 1988 |

திதி:- 25-12-1988

ஆண்டொன்று சென்றாலும்
அன்புருவத்தை நம் மறவோம்.
[illegible]
இவ்வுலகில் வாழ்கின்றோம்.
எமது அன்புத் [illegible] ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்.

சந்திர தோட்டம்,
ஞானபாச வீதி,
கல்வியங்காடு

(8368)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
மிகச் செய்து தம் எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று

**பொருள்:**
புறத்தே மிகுதியாக நட்புத் தோன்றச் செய்து அகத்தில் இகழ்கின்றவரைத் தாமும் அந் நட்பில் நகைத்து மகிழுமாறு செய்து அத்தொடர்பு சாகுமாறு நடக்கவேண்டும்.


# உதயன்

உண்மை – நேர்மை – நடுநிலை

இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
25-12-1988 சு. பெ இல 23


## மனிதனே! நீ திருந்துவாயா?

இன்று கிறிஸ்தோதயத் திருநாள். தேவமைந்தன் இயேசு கிறிஸ்துநாதர் உலகில் உதித்த நினைவு நாளை உலகு எங்கும் வாழும் கோடானு கோடி கிறிஸ்தவ மக்கள் அவதார புருஷர் யேசுவின் ஞாபகமாக இன்று நத்தார் கொண்டாடுகின்றனர்.

நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவோரில் பலரும் ஏனையவர்களும் யேசுவின் பிறப்பில், அவர் வாழ்க்கையில், அவர் போதனைகளில் உள்ள தாற்பரியங்களை, தத்துவங்களை, படிப்பினைகளை, உணர்வதும் உணர்ந்து நடப்பதும் மிகக் குறைவு.

அன்பு, கருணை, மனிதநேயம் ஆகிய மூன்று முக்கிய விடயங்களை அவரது வாழ்க்கையும், போதனைகளும் வலியுறுத்துகின்றன.

அடக்கப்பட்டோருக்காக, ஒடுக்கப்பட்டோருக்காக அவர் குரல் கொடுத்தார். தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். மனிதரிடையே நிலவும் ஏற்றத்தாழ்வு, பேதம் என்பவற்றைக் களைந்தெறியப் பாடுபட்டார். மக்கள் சமத்துவமாகவும், சகோதரர்களாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டும் என்று விரும்பினார். சமத்துவ சமூக அமைப்பை உருவாக்க விரும்பினார்.

1988 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் தேவதூதனாக உலகின் கண் அவதரித்தார். அவர் கண்ட கனவுகள், இந்த நீண்ட இடைவெளியின் பின்னரும், உலகில் பூரணமாகச் செயலுருப் பெறவில்லை. மக்கள் நலன் நாடும் பலருக்கும் மனவேதனை தரும் விவகாரம் இது.

அவரது போதனைகள் பலவற்றையும், கிலோ என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு கவலைப்படும் நிலைக்கு உலகில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை அமைந்திருக்கிறது. அவர்கள் திருந்தியதாக இல்லை.

அன்பு, கருணை, மனிதநேயம், சகோதரத்துவம், தாபம், நீதி என்பன கணக்கில் எடுக்கப்படாதவை ஆகிவிட்டன.

இல்லையேல், ஏழைகள் பசி, பட்டினி கிடக்க நேருமா? நமீபியா போன்ற பல நாடுகள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடுகளாக வருவதற்கு போராடும் நிலை நீடிக்குமா? வேறு பல நாடுகளிலும் ஆதிக்க வெறிக்கு எதிரான போராட்டங்கள் நடக்க வேண்டிய தேவை ஏற்படுமா? – இல்லவே இல்லை!

உலகம் ஓர் இன்பமான இடமாக மாற வேண்டுமாயின் அவதார புருஷர்கள், ஞானிகள், அறிஞர்கள் கனவு கண்ட அன்பும், மானுடமும், மனுநீதியும், தர்மமும் மலர வேண்டும். இல்லையேல் சஞ்சலமும் சச்சரவும் அதர்மமும் இவ்வுலகை விட்டு நீங்கா.

அந்த நிலையை மாற்றி இருட்டில் ஒளியைக் காணவும் மனித வாழ்க்கையில் மாற்றத்தைக் காணவும் மனிதனது மனதில் மறுமலர்ச்சி தேவை; மாற்றம் தேவை. அவன் திருந்திக் கொள்ள வேண்டும்.

மனிதனே நீ திருந்துவாயா? இல்லையேல் உன்னை இரட்சிக்க இன்னொரு இயேசு வரும் வரை காத்திருந்து காலத்தை வீணாக்கப் போகிறாயா? நீ உன்னைத் திருத்தினால் தான் மற்றவனைத் திருத்த முடியும். அப்போதுதான் உலகம் திருந்தும்.

"நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்.

"ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" என்ற சுவிசேஷ வாசகத்தை ஈண்டு உணர்ந்து கொள்ளுதல் பொருத்தம்.

## பான்அம் விமான விபத்து; நாசவேலை அல்லவாம்!

ஸ்கொட்லந்து மேற்குப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பான் அம் விமான விபத்துக்கு காரணம் நாச வேலை அல்ல என்று பூர்வாங்க விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க, பிரிட்டிஷ் விமான சேவை நிபுணர்கள் கூட்டாக நடத்திய விசாரணையில் விமானத்தில் இருந்த கறுப்புப் பெட்டியில் இருந்த ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்ட குரல்கள் ஆராயப்பட்டன.

கடைசியாக பிரெஞ்சு மொழியில் ஒரு குரல் பேசியது அந்த நாடாவில் பதிவாகியிருக்கிறது.

அந்தக் குரல் என்ன தெரிவித்தது என்பது மர்மமாக இருக்கிறது.

அதைப் புரிந்து கொள்வதில் விமான சேவை நிபுணர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர். (எ)

### தீவிர முயற்சி

ஆர்மேனியா, அஸர்பைஜான் மாநிலங்களின் மக்களிடையேயான கசப்புணர்வைப் போக்க சோவியத் அரசு தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றது.

1973 புரட்சியில் பதவி இழந்த

# மன்னர் ஸாஹிர் ஷா தலைமையில் ஆப்கனில் புதிய அரசாங்கம்?

ரோம் டிச 24

ஆப்கன் பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

1973 புரட்சியில் பதவி இழந்து நாட்டைவிட்டு வெளியேறி இத்தாலியில் தஞ்சமடைந்த ஆப்கன் மன்னர் முஹமது ஸாகிர் ஷாவுடன் சோவியத் அரசு நேரடிப் பேச்சுக்களை நேற்று ஆரம்பித்தது.

ரோமில் தங்கியிருக்கும் மன்னர் ஷாவுடன் பேச சோவியத் பிரதி வெளியுறவு அமைச்சர் யுல்லி வொரொன்ஷோவ் நேற்று ரோம் போய்ச் சேர்ந்தார்.

இப்பேச்சுக்களை நடத்த இத்தாலி அரசு உதவி வருகிறது.

சோவியத் பிரதி அமைச்சர் முன்னர் காபூலில் தூதராகப் பணியாற்றினார்.

ஆப்கன் சமாசாரம் பற்றிய விபரங்களை நுணுக்கமாக தெரிந்து வைத்திருப்பவர் இவர்.

ஏற்கனவே இவர் ஆப்கன் கெரில்லாத் தலைவர்களுடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஆப்கன் யுத்தத்தில் பிடிபட்ட சோவியத் யுத்தக் கைதிகளை விடுவிப்பது சம்பந்தமாக இப்பேச்சுக்கள் அமைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

### சோவியத் அமைச்சர் ரோமில் ஷாவுடன் பேச்சு

பின்னர் சோவியத் அமைச்சர் ஈரான அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

முன்னாள் ஆப்கன் மன்னர் ஷாவின் தலைமையில் சகல தரப்பினரும் அங்கம் வகிக்கும் அரசு ஒன்றை ஆப்கனில் அமைக்கும் முயற்சியில் சோவியத் அரசு ஈடுபட்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனிவா உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து வருகிற பெப்ரவரி 15க்குள் சோவியத் துருப்புக்கள் முற்றாக ஆப்கனில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

அதற்கு இடையில், தேசிய இணக்கம் ஒன்றை கெரில்லாக்களுக்கும் ஆப்கன் அரசுக்கும் இடையே ஏற்படுத்த வேண்டும் என்பதில் மாஸ்கோ அக்கறை காட்டி வந்தது.

அது சரிவராத நிலையில் முன்னாள் மன்னர் ஷாவின் உதவியை சோவியத் நாடியிருக்கிறது. (எ)

## ஐ.நா. ஆதரவில் யுத்தநிறுத்தம் அரபு பிரதேசத்தில் கொண்டுவருக

### பேத்லஹேம் நகர மேயர் வேண்டுகோள்

பெத்லஹேம் டிச 24

ஒரு வருடகால யுத்த நிறுத்தம் ஒன்றைக் கைப்பற்றப்பட்ட அரபுப்பிரதேசத்தில் உடனே கொண்டு வர இஸ்ரவேல் அரசும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் உடன்பாடு ஒன்றை செய்து கொள்ள வேண்டும்.

பெத்லஹேம் நகர மேயர் எலியாஸ் பிரேஜ் நேற்று இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஜெரூசலம் போஸ்ட் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த யுத்த நிறுத்த உடன்படு ஐ.நா. சபையின் ஆதரவுடன் செய்யப்படவேண்டும்.

கடந்த ஓர் ஆண்டு காலமாக இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட காஸா, மேற்குக் கரைப் பிரதேசம் ஆகியவற்றில் இடம்பெற்றுவரும் தாயகம் மீட்கும் கிளர்ச்சி நிறுத்தப்படவேண்டும். அரபுகளுக்கு எதிரான சகல இராணுவ நடவடிக்கைகளையும் இஸ்ரவேல் இந்த ஒரு வருடகாலத்தில் மேற்கொள்ளக் கூடாது.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சகல முயற்சிகளும் யுத்த நிறுத்தக் காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டும்.

இப்படி பெத்லஹேம் நகர மேயர் தெரிவித்தார்.

இதனிடையில் — நத்தார் தினக் கொண்டாட்டங்களை நடத்தும் நிலையில் பெத்லஹேம் மக்கள் இல்லை என்று பி.பி.சி. அறிவிக்கிறது.

இதேவேளை பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் எந்தப் பேச்சுக்களையும் வைத்துக் கொள்ளுவதில்லை என்று இஸ்ரவேலில் பதவி ஏற்றுள்ள லிகுட் – தொழிற் கட்சிக் கூட்டரசு அறிவித்திருக்கிறது.

### ஈ. வே. ரா. நினைவுதினம்

பகுத்தறிவுத் தந்தை என்றழைக்கப்படும் பெரியார் ஈ.வே.ரா.வின் 16 ஆவது நினைவுதினம் வெள்ளியன்று அனுஷ்டிக்கப்பட்டது. (எ)

## அணுமின் நிலையத் திட்டங்களை சோவியத் யூனியன் கைவிடுகிறது

### மக்களின் எதிர்ப்புக்கு பணிந்து

மாஸ்கோ டிச 24

சோவியத் யூனியனில் இனிமேல் அணுமின் நிலையங்களைக் கட்டுவதில்லை என்று மாஸ்கோ அரசு அறிவித்திருக்கிறது.

சட்ட திட்டமிடப்பட்டுள்ள ஆறு மின் நிலையத்திட்டங்களைக் கைவிடுவது என சோவியத் அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய மின்சக்தி அமைச்சர் நிக்கொலய் லுக்கோனவ் நேற்றுத் தெரிவித்தார்.

மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

இயற்கை அழிவுகளின் போது அணுமின் நிலையங்கள் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து உள்ளது. அதனால் மனித இனம் அழியும் வாய்ப்பு உருவாகலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட ஆர்மேனியாவில் உள்ள அணுமின் நிலையத்தை இரண்டு ஆண்டு காலத்தினுள் கட்டம் கட்டமாக மூடிவிடுவது என்று சோவியத் அரசு தீர்மானித்தது தெரிந்ததே.

அணுமின் நிலையங்களை மூடுவதாலும், புதிய திட்டங்களைக் கைவிடுவதாலும் ஏற்படும் மின்பற்றாக்குறையைச் சமாளிக்க நீர்மின்திட்டங்கள் நிலக்கரியில் இயங்கும் மின் திட்டங்களை ஆரம்பிக்க சோவியத் அரசு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

## எம்.ஜி.ஆருக்கு நினைவுச்சின்னம் 22 லட்சம் ரூபாவில் அமையும்

சென்னை டிச.24

சென்னையில் மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் முதலாவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அவரின் சமாதிக்கு நேற்று மாநில ஆளுநர் அலெக்ஸாண்டர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

ஜானகி அம்மாள், ஜெயலலிதா, நெடுஞ்செழியன் உட்பட பலர் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையில் சமாதியில் நினைவுத் தூபி ஒன்றை எழுப்பும் நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது. இதற்காக 22லட்சம் ரூபா செலவிடப்படும்.

## நெடுஞ்செழியன் மயங்கி விழுந்தார்

ஈரோடு டிச 24

ஈரோடு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியன் மயங்கி விழுந்தார்.

ஈரோடு சூரம்பட்டியில் இது இடம் பெற்றது.

இது பற்றிய விவரம் வருமாறு:

கூட்டத்தில் நெடுஞ்செழியன் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது ஒருவர் எழுந்து உங்களுக்கு வாக்குப் போட மாட்டோம் என்றார். இதனை நெடுஞ்செழியன் ஆத்திரமடைந்தார்.

'ஒன்று நான் பேசுவதைக் கேள். இல்லை என்றால் கூட்டத்தை விட்டு வெளியே போ! மனிதனுக்கு சூடு சொரணை வேண்டாமா? ஒரு மாட்டுக்கு ஒரு சூடு. நீ என்ன எருமை மாட்டு ஜென்மமா? கேட்டாக கேள் இல்லாவிட்டால் போ'— இப்படிப்பேசிய நெடுஞ்செழியன் திடீர் என மயங்கி விழுந்தார்.

மயக்கம் தெளிந்த பின்னர் 'எனக்கு வயது 61 ஆகி விட்டது உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்'— என்றார். (எ)

## எஸ். வி. சேகரும் தேர்தலில் போட்டி

சென்னை டிச 24

நடிகர் எஸ். வி. சேகர் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

மணல் கயிறு, சகாதேவன் மகாதேவன் ஆகிய படங்களில் இவர் நடித்திருக்கிறார்.

மைலாப்பூர் அல்லது திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவிக்கும் அவர் தனது தேர்தல் சின்னமாக 'சிரிக்கும் பொம்மை' இருக்கும் என்று தெரிவித்தார். (எ)

## நூறு டெஸ்ட் விளையாடிய 1 ஆவது ஆஸி. வீரர் அலன் போர்டர்

மெல்போர்ன், டிச 24

நூறு டெஸ்ட் போட்டிகளை விளையாடிய முதலாவது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை அலன் போர்டர் பெற்றார்.



அவரின் நூறாவது டெஸ்ட் போட்டியாக தற்போது மெல்போர்னில் ஆஸ்திரேலிய மேற்கிந்திய அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் அமைந்தது.

தொடர்ச்சியாக நூறு டெஸ்ட்களுக்கு மேல் விளையாடி உலக சாதனை புரிந்தவர் இந்திய வீரர் சுனில் கவாஸ்கார்.

அதை இன்னும் எவரும் முறியடிக்கவில்லை. (எ)

## இயேசு விடுத்த சமாதானச் செய்தி

# உலக நாடுகளில் நிதர்சனமாகி வருகிறது; அவர் பிறந்த பெத்லஹேமைத் தவிர!

**யேசு** நாதர் உலகுக்கு விடுத்த சமாதானச் செய்தி இந்த ஆண்டில் உலக நாடுகள் பலவற்றில் நிதர்சனமாகி வருகிறது.

ஆனால் யேசுநாதர் பிறந்த சிறிய பட்டினமான பெத்லஹேமில் அந்த சமாதானத்தைக் காண முடியாது.

காரணம் யூத வேலிய அரசினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் கடந்த ஒரு வருட காலமாக பலஸ்தீனியர் நடத்திவரும் தாயகம் மீட்கும் கிளர்ச்சியே.

பெத்லஹேம் நகரில் சாதாரண கிறிஸ்தவ சமயச் சடங்குகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன.

நத்தார் கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரு மாதகால எழுச்சியில் 340க்கு அதிகமான பலஸ்தீனியரும், 13க்கு அதிகமான இஸ்ரவேலிய படையினரும் உயிரிழந்தனர்.

இறந்தவர்களுக்காக இன்று பெத்லஹேம் அழுது கொண்டிருக்கிறது.

இருந்தும் புதிய அரசியல் அலை ஒன்று வீசத் தொடங்கியிருக்கிறது.

### புதிய நிலை

மத்திய கிழக்கில் 40 ஆண்டுகளாக இஸ்ரவேலியருக்கும் அரபுக்களுக்கும் இடையே நிலவும் மோதலின் முடிவாக இது அமையுமா? அமையும் என்றே நல்லது நடக்கும் என நம்புபவர்கள் நம்புகின்றனர்.

இஸ்ரவேலின் முக்கிய ஆதரவாளர் அமெரிக்கா.

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேசத் தயார் என்று அமெரிக்கா அறிவித்து விட்டது.

பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக யசீர் அரபாத் அறிவித்த பின்னரே புதிய அலை வீச ஆரம்பித்துள்ளது.

ஏனைய உலக நாடுகளிடையே பாராட்டை, வரவேற்பைப் பெற்றுள்ளது. ஓர் ஒரு நாடு — இஸ்ரவேலுக்கு மட்டும் இது மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

இதனிடையில் உலகில் ... இருந்து ஆபிரிக்கா வரை

### உலகில் சமாதான முயற்சிகள் பற்றி ஒருகண்ணோட்டம்

நீண்டகால மோதல்கள் பலவற்றுக்குத் தீர்வு காணும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு-மேற்கு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் நீங்கியிருக்கிறது.

பிரிட்டனைச் சேர்ந்த ஆயுத உற்பத்தியாளர் ஒருவர் இந்த நிலை பற்றி பின்வருமாறு சொன்னார்;

"இப்போது உலகை சமாதானம் தான் பயமுறுத்துகிறது"—இந்த ஆயுத உற்பத்தியாளரின் ஆயுத மார்க்கட் பாங்கொக்கில் உள்ளது.

வளைகுடா யுத்த நிறுத்தத்துடன் தான் சமாதான அலை தெளிவாகப் புலப்பட ஆரம்பித்தது.

கடந்த ஆகஸ்ட் 20ல் ஈரானும், ஈராக்கும் ஆயுதங்களைக் கீழே போட்டன.

10 லட்சம் பேர் அளவில் இந்த யுத்தத்தில் உயிரிழந்தனர்.

தென் ஆபிரிக்காவிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

நமீபியா சுதந்திரம் ... பிறகு நமீபியாவுக்கு அடுத்த ஆண்டு சுதந்திரம் கிடைக்கப்போகிறது.

இது சம்பந்தமான உடன்பாட்டில் தென் ஆபிரிக்கா, அங்கோலா, கியூபா ஆகிய 3 நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

அடுத்தது ஆப்கனிஸ்தான் அமைதிஉடன்பாடு.

கடந்த மே மாதம் முதல் ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலகத் தொடங்கியுள்ளன.

கம்பூச்சியாவில் இருந்தும் வியட்னாம் துருப்புக்கள் விலக ஆரம்பித்துள்ளன.

1978இல் கம்பூச்சியாவை வியட்னாம் முற்றுகையிட்டது.

இந்த ஆண்டு முடிவில் 50 ஆயிரம் வியட்னாம் துருப்புக்கள் விலகிவிடும்.

எஞ்சிய துருப்புக்கள் 1990இல் வெளியேறிவிடும். இதனிடையில் கம்பூச்சியாவின் நொம்பென் அரசு 3 கெரில்லாக் குழுக்களுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்திவரும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

### மேற்கு சஹாரா

சமாதான முயற்சி மேற்கு சஹாராவுக்கு பரவியுள்ளது. அங்கு மோதலில் ஈடுபட்டுள்ள மொரொக்கோ அரசும் பொலிஸாரியோ முன்னணியும் ஐ.நா. திட்டத்தை ஏற்று யுத்த நிறுத்தம் செய்து சர்வசன வாக்கெடுப்பு நடத்த கடந்த ஆகஸ்டில் தீர்மானித்தன.

மேற்கு சஹாரா மொரொக்கோவுடன் சேர்ந்து இருப்பதா? அல்லது தனிநாடாக இருக்கவேண்டுமா? என்பதை இச் சர்வசன வாக்கெடுப்பு தீர்மானிக்கும்.

### நிக்கரகுவா

நிக்கரகுவாவில் கொன்ட்ராகிளர்ச்சியாளரின் இராணுவத் தாக்குதல்கள் குறைந்துவிட்டன.

அவர்களுக்கு இராணுவ உதவியை அமெரிக்க அரசு வழங்கி வந்தது. அதை நிறுத்தும் தீர்மானம் ஒன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னரே கொன்ட்ராகிளர்ச்சியாளரின் கொட்டம் குறைந்தது.

### வல்லரசுகள் உடன்பாடு

1987இல் அமெரிக்க, சோவியத் வல்லரசுகள் நடுத்தர ஏவுகணைகளைக் குறைக்கும் உடன்பாட்டை செய்துகொண்டன. 2 ஆயிரத்து 500க்கு அதிகமான ரொக்கட்களை அழிக்கும் நடவடிக்கையில் இரண்டு வல்லரசுகளும் ஈடுபட்டுள்ளன.

### வார்சோ – நேட்டோ அணிகள்

ஐரோப்பியாவில் இருக்கும் அணு ஆயுதங்கள் அல்லாத படை பலத்தைக் குறைப்பது சம்பந்தமான பேச்சுக்களை நடத்தும் முயற்சியில் அமெரிக்கா சார்பான நேட்டோ அணியும் சோவியத் சார்பான வார்சோ அணியும் ஈடுபட்டுள்ளன.

இம்மாதம் 7ஆம் திகதி கிழக்கு ஐரோப்பாவில் இருந்து 5 லட்சம் துருப்புக்களை விலக்கிக் கொள்ளப் போவதாக சோவியத் தலைவர் கோர்பச்சேவ் ஐ.நா. பொதுச் சபையில் அறிவித்தார்.

ஆக கிறிஸ்துவின் சமாதானச் செய்தி இந்த ஆண்டு அவர் பிறந்த மண்ணில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுரம் ★ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

உதயன்
25 - 12 - 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# யாழ். நகரில் இரு கடைகள் தீயினால் கருகி நாசம்

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் இரண்டு கடைகள் திடீரென தீப்பற்றி எரிந்து நாசமாகின.

கஸ்தூரியார் வீதியும் மின்சார நிலைய வீதியும் இணையும் சந்திக்கு அருகாமையில் உள்ள "பான்சிப்" பொருள்களை விற்கும் கடைகளே எரிந்தவையாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த இச்சம்பவத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து போனதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தீப்பற்றியதற்கான சரியான காரணம் எது என்பது குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை. (ஓ-10)

# ஜெயலலிதா ஸ்ரீரங்கம் அல்லது விளாத்திகுளத்தில்!

அ. தி. மு. க. 'ஜெ' அணி தலைவி ஜெயலலிதா ஸ்ரீரங்கம் அல்லது விளாத்திகுளம் தொகுதியில்தான் போட்டியிடுவார் என்று சென்னைச் செய்தி தெரிவிக்கிறது.

ஜெயலலிதா அணி மூன்றாவது வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டது. அப்பட்டியலில் 52 வேட்பாளர் பெயர்கள் இருந்தன.

ஆனால் ஜெயலலிதா எந்தத் தொகுதியில் போட்டியிடுவார் என்பது வெளியிடப்படவில்லை (ஓ-எ)

## தி.மு.க - ஜனதா கூட்டு

திராவிட முன்னேற்றக் கழகம் ஜனதா கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கண்டிருப்பதாக அறிவித்துள்ளது.

## முதலீடு செய்தோருக்கு ....

(1 ஆம்பக்க தொடர்ச்சி) குப் புத்தகங்களைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அடையாள நிவாரணப் பணம் வழங்கும் திகதிக்கு முன்னர் இந்நடவடிக்கைகள் பூர்த்தியாகிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வைப்புச் செய்யப்பட்ட பணத்தில் 50 சதவீதம் அல்லது ஆகக்கூடியது 20 ஆயிரம் ரூபா அடையாள நிவாரணப் பணமாக வழங்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதற்குப் பதிலாக பண வைப்பாளரிடம் இருந்து மத்திய வங்கி உறுதிமொழி ஒன்றைப் பெறும்.

"ஒரு குறிப்பிட்ட காலம்வரை வைப்புச் செய்த முழுத் தொகையையும் திருப்பித் தரும்படி வைப்பாளர்கள் கேட்கக் கூடாது"- இதுவே அந்த உறுதிமொழி என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்படும் நிதி நிறுவனங்கள் வருமாறு:-

★ யூனியன் ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட்.
★ ஹோம்பினான்ஸ்,
★ ஹிடெகி பினான்ஸ்.
★ சராபூமி இன்வெஸ்ட் மென்ட் கம்பெனி.

கலைக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் வருமாறு:-

★ பினான்ஸ் அன்ட் கரண்டி லிமிட்,
★ செவன பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்,
★ யூனைட்டட் மோட்டார் பினான்ஸ்,
★ காசில் பினான்ஸ் அன்ட் ட்ராவல் பாக இன்வெஸ்மென்ட்,
★ பினான்ஸ் லிமிட்.

நெற் பயிரைத் தாக்கும்
சந்துகுத்தி, இலைமடிச்சுக்கட்டி, பனிப் பூச்சி, மற்றும் காய்கறி வகைகளை தாக்கும் வெட்டுப்புழுக்கள், அழுக்கணவன், இலை சுரக்கயறுப்பி ஆகியவற்றை முற்றாக அழிக்க பாவியுங்கள்.
ஒன்கோல் - 3 % குருணி
(பென்பியூறகாப்)
சில்லறை விலை:- 2 Kg. 90/-
LANKEM
ලංකෙම් லங்கெம்
லங்கெம்-விவசாயிகளின்தோழன்'.
(C/974)

# அரசிடம் நிவாரணம் கோரி $3\frac{1}{2}$ லட்சம் தமிழர் பதிவு

கொழும்பு, டிச 25

மூன்றரை லட்சம் தமிழ் மக்கள் நிவாரணம் கோரி புனர்வாழ்வு நிர்மாணத்துறை அமைச்சில் இதுவரை தமது பெயர்களை விண்ணப்பம் செய்திருக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக பலவிதத்திலும் பாதிக்கப்பட்டவர்கள், புனர்வாழ்வு நிர்மாணத்துறை அமைச்சில் தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரங்களை பதிவு செய்திருக்கின்றனர்.

இந்தப் பதிவுகளை ஏற்றுக்கொள்வதற்கான முடிவு திகதி எதையும் சம்பந்தப்பட்ட அமைச்சு இன்னும் திர்க்கமாக அறிவிக்கவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது உண்டான சேத விபரங்கள் சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரங்கள், தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை சமர்ப்பித்து பதிவுகள் செய்துகொள்ளப்படுகின்றன. (ஓ-ஐ)

## ஜன. 2ஆம் ..

(1 ஆம்பக்கதொடர்ச்சி) பிரேமதாஸ மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெறுவார்.

அதன்பின்னர் அவர் கண்டி கட்டுகலை செல்வ விநாயகர் ஆலயத்துக்கும், அண்மையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் மீராமக்கம் பள்ளிவாசலுக்கும் சென்று விசேஷ சமய வழிபாடுகளில் கலந்து கொள்வார்.

இத்தகவலை ஐனாதிபதியின் செயலாளர் திரு. மெனிக்திவல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் (ஓ எ

## தமிழ் நாட்டி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி) வர்.

அறிவிக்கப்படாமல் எஞ்சியுள்ள 11 தொகுதிகளில் ஒன்றில் காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் போட்டியிடலாம் என்று பொதுச் செயலாளர் சொன்னார்.

14 தொகுதிகளை முஸ்லிம் லீக் தமது அணி, அம்பேத்கார் கட்சி, குடியரசுக் கட்சி, போர்வாட்புளொக் ஆகியவற்றுக்கு இந்திரா காங்கிரஸ் விட்டுக்கொடுத்திருக்கிறது. ஓ-எ)

## தமிழ் இளைஞர்...

(1 ம்பக்கத் தொடர்ச்சி) கள்

சே. ராமதாஸ் (24 வயது), எம். மகேஸ்வரன் (23 வயது), வி சோமசுந்தரம் (25வயது) ஆகியோரே படுகொலை செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் ஆவர்.

இவர்களது தலைகள் துண்டிக்கப்பட்டு உடல் வேறு தலை வேறாகக் காணப்பட்டனவாம்.

தென்னிலங்கைத் தீவிரவாத இயக்கத்தினரால் ஒட்டப்பட்டிருந்த சிசுவரொட்டிகளைச் சம்பந்தப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் கிழித்ததாகவும், அதற்குத் தண்டனையாகவே அவர்கள் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும் அப்புத்தளை பகுதியில் பரவலாகப் பேசப்பட்டதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ஐ)

## யாழ்.மாவட்ட...

(1 ஆம்பக்க தொடர்ச்சி) படுவதும் குறைந்த சம்பளத்தில் கூடிய நேர வேலை வழங்கப்படுவதுமான சூழ்நிலையில் இன்றும்வாழ்வது துரதிஷ்டவசமானது என்று அவர் கவலை தெரிவித்தார்.

இப்பகுதியில் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு சம்பள நிர்ணய சபையால் நிர்ணயித்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட நேர வேலையும், மேலதிகநேர வேலைக்கு மேலதிக சம்பளமும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை. ஏனைய விடுமுறை நாட்களில் வேலைசெய்யும் பட்சத்தில் மேலதிக சம்பளம் ஆகியனவும் வழங்கப்படுதல் வேண்டும்.

அத்தியாவசிய தேவைகளான மருந்துக்கடை, உணவு விடுதிகள், தேனீர்க் கடைகள் என்பன விடுமுறை நாட்களிலும் திறக்கப்பட வேண்டிய அவசியமிருப்பதால் அவற்றில் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் நேரம் கணக்கிட்டு மேலதிகமாக விசேட சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்களும், மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படுதல் அவசியம் — என்று திரு. பத்மநாபா மேலும் குறிப்பிட்டார்.

ஆகவே யாழ் மாவட்டத்திலுள்ள சகல தொழிலாளர்களினதும் அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும் வர்த்தகச்சிப்பந்திகளின் சட்டபூர்வமான உரிமைகள் அவர்களைச் சென்றடையவும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வடகிழக்கு மாகாண அரசின் மூலம் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இன உணர்வுகளையும் விடுதலை உணர்வுகளையும் முதலாளிகள் தமது சுரண்டலுக்கு நல்ல அடிப்படையாகப் பயன்படுத்துவதை இன்று நிதர்சனமாகக் காண முடிகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை என்றும் தொழிலாளர் விவசாயிகள் பக்கம் நின்று உறுதியுடன் போராடும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன் — என்றும் அவர் தெரிவித்தார்.

## சார்க்....

(1 ஆம்பக்க தொடர்ச்சி) 2 ஆம் திகதி ஏற்கப்போவதாக அவர் அறிவித்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

சம்பிரதாயபூர்வமாக பதவியை ஏற்கும் முன்னர் திரு பிரேமதாசா வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்வதைத் தவிர்க்கும் விதமாகவே திரு. ஜெயவர்த்தன இஸ்லாமபாத் செல்லவிருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. ஜெயவர்த்தனவுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாப் ஏ.சி.எஸ் ஹமீத் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்றும் பாகிஸ்தான் செல்கிறது.

சார்க் மாநாடு இவ்வாண்டு இலங்கையில் நடைபெற இருக்கிறது என்பதும்-

வன்செயல்கள் காரணமாக இம்மாநாட்டை இஸ்லாமபாத்துக்கு மாற்றுவது என தீர்மானிக்கப்பட்டது என்பதும் தெரிந்தவையே. (ஓ-ஐ)

## 3 தமிழரே தெரிவு

இலங்கை கல்வி நிர்வாக சேவை இரண்டாம் தர வகுப்புக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.

நேர்முகப் பரீட்சை மூலம் 108 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் தமிழர்கள் மூவர் மட்டுமே ஆவர்.

அந்த மூவரும் வருமாறு:-

1 அருட்செல்வி அந்தோனிமுத்து (கல்முனை)
2. திரு ஈ ஆர். இராஜலிங்கம் (அதிபர்/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)
3. திரு எஸ். மனோகரன் (மட்டக்களப்பு, கல்வித் திணைக்களம்). (ஓ

## ஜானகி அணி 177 தொகுதிகளில்

அ. தி. மு. க ஜானகி அணி, தமிழர் முன்னேற்றக் கழகம், போர்வேட் புளோக், உழைப்பாளர் கட்சி ஆகியவற்றுக்கு 57 தொகுதிகளை விட்டுக் கொடுத்திருக்கிறது.

மிகுதி 177 தொகுதிகளில் ஜானகி அணி வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். (ஓ எ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. நடராஜா ஜெயக்குமார் (கண்ணன்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 1986 இல் இருந்து நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு நடராஜா ஜெயக்குமார் 22-12-88 இல் அகால மரணம் அடைந்துவிட்டார்.

இவர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவரும், திரு. நடராஜா, கனகாம்பிகை தம்பதிகளின் புதல்வரும், மஞ்சுளாதேவி, சண்முகலிங்கம், வக்சலாதேவி, ஜெயந்தி, பிறேமளா (சுமதி), வதனராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா, மூ செல்வராஜா, ஆ. செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருள்விழி, அருட்சுதன், அருளினி காலஞ்சென்ற வாணிதாசன், வாகீசன், செல்வரூபி, ஜெயகௌரி, நுகர்சினி, மகிந்தன் ஆகியோரின் மாமனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 23-12-88 அன்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
க. தியாகராஜா (மைத்துனர்)
இல: 51 (11/20 B)
பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு (8386)

## திரு. சண்முகம்பிள்ளை விஜஷித்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர் St. Thomas College Mount Lavinia)

மூளாய் திரு. ச விஜஷித்தம்பி அவர்கள் காலமானார். இவர் செல்வத்தின் அன்புக் கணவரும், விசாகத்திலகர் (Accountant), பொன்சோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், தில்லைநடராசா ஆகியோரின் அன்பு மாமனும், காலம் சென்ற சிவகுருநாதர் (மலேசியா), காலம் சென்ற சரஸ்வதி, பருவதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோன்மணி கனகரத்தினம் சிவபாக்கியம், சிவகெங்கை ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலம் சென்ற வேலாயுதம் சிவசுப்பிரமணியம், அமுதவல்லி, தம்பிராசா ஆகியோரின் சகலனும், நம்பி, யுவராசா, மங்களர், துங்கர், குரு, வித்தியா, யுகா, இங்கிதா, திருமா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (25-12-88) ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தில்லைநடராசா
மூளாய் (8380)

## திரு. ச. இரத்தினசிகாமணி (சின்னண்ணு)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காட்டுவளவு என்னும் இடத்தில் வசிக்கும் சபாரத்தினம் இரத்தினசிகாமணி (சின்னண்ணு) என்பவர் பலாலியில் அகால மரணமானார். இவர் நம்பியின் அன்புத் தகப்பனாரும், பெரியக்காவின் அன்புக் கணவரும் ஆவார். இவரின் ஈமக்கிரிகைகள் பலாலியில் 24-12-1988 இல் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.-
செல்வக்குமரன் (நம்பி)
மாணிக்கரத்தினம்.
(பெரியக்கா)
(8488)

## திரு.சே.க. சண்முகம்பிள்ளை

(இளைப்பாறிய பிரதம கணக்காளர் சமநல சேவைத் திணைக்களம்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீராவியடி 20/1 சிவகுருநாதர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு.சே.க. சண்முகம்பிள்ளை 21-12-88 புதன்கிழமை காலமானார்,

இவர் காலஞ்சென்ற சே கந்தையா தம்பதிகளின் அருமைப் புதல்வன். காலம் சென்ற இரட்சணியதேவியின் அன்புக் கணவர். காலஞ்சென்ற த. திருநாவுக்கரசு (மலாயன் பென்ஷனர்), மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருகர். ஸ்கந்தகுமரன் (B Sc Dip in Ed, London - American Express Bank, கனடா), ஜெயக்குமாரி, செல்வக்குமார் (American Express Bank, கனடா) ஆகியோரின் தந்தை. இராஜகோகிலம் (B Sc. கனடா), ஜில்லியன் (கனடா ஆகியோரின் மாமனார். திருமதி வாலாம்பிகை படிகலிங்கம், திருமதி தில்லையம்மா பொன்னம்பலம், காலஞ்சென்ற சே. க. நாகையா, திருமதி பாக்கியம் வைத்திலிங்கம், திருமதி விசாலாட்சி தியாகராஜா, சே. க. நாகலிங்கம் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர். பெருந்தெருக்கள் திணைக்களம் , சே. க. படிகலிங்கம் (வீதி பராமரிப்பு அதிகாரசபை ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் அன்புச் சகோதரர், திருமதி கிருபாதேவி மகாராசா, காலம் சென்ற தி. தவநாயகம் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், கட்டிடத் திணைக்களம்), திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம், திருமதி தற்பராதேவி தில்லைநாதன் (ஆசிரியை), திருமதி மகாதேவி சங்கரலிங்கம் ஆகியோரின் மைத்துனர். பிரதீப், சங்கீதா, கிரிசாந்த் ஷாமினி (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனார்.

ஈமக்கிரியைகள் 25-12-88 ஞாயிற்றுக்கிழமை இன்று பிற்பகல் 1-00 மணிக்கு 22/1, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சே. க படிகலிங்கம்
22/1 அம்மன் வீதி,
கந்தர்மடம். (8374)

## திரு குமாரவேல் சண்முகராஜா

(திருநெல்வேலி வடக்கு)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி வாசியுமாகிய குமாரவேல் சண்முகராஜா 21-12-88 இல் காலமானார். இவர் மாவட்ட வனபரிபாலன அதிகாரியாவார். (Assistant Conservator of Forest, Trincomalee)

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் விஜித்தா (Y W C A, Colombo 3), சாந்தகுமார் (பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற குமாரவேல், பார்வதி அம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. செல்லையாவினதும் திருமதி குருமணி செல்லையாவினதும் அன்பு மருமகனும் குகதாஸ் (Planning Branch Kachcheri, Jaffna) அவர்களின் அன்புச் சகோதரரும், பத்மராணி குகதாஸின் மைத்துனரும், சுபாஷினி, ஷாலினி ஆகியோரின் பெரியப்பாவும், திலகவதி, குமாரச்சந்திரன் (லண்டன்), விமலாவதி. ரட்ணலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நரேந்திரன் (Maharajah, Colombo), அருந்தவநாயகி (லண்டன்). மகேசநாயகம் (லண்டன்), ஜெயதேவன் (Buildings Department Jaffna) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் முன்னர் அறிவித்தது போலன்றி 25-12-88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 76, பலாலி வீதி. "சாந்தம்" திருநெல்வேலியில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுபடி தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி சண்முகராஜா
(8489)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ... நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் ... 25 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 25th December 1988